Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU National Tamil Daily

தேசிய தினசரி

போன்: 389

தபாற் பெட்டி எண். 49

மலர் 5 | யாழ்ப்பாணம், | சுபகிருது | மாசி 26ஆம் நாள் | றம்zான் பிறை 13 | (10-3-63) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் [illegible]0

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

# பாரதத்துக்கு உடன் இராணுவ உதவிகள்!

## சீன மீண்டும் தாக்கினல் அமெரிக்கா கொடுக்கும்

### நிருபர் கூட்டத்தில் திரு. டீன் றஸ்க் தகவல்

வாஷிங்டன், மார்ச் 9

**பாரதத்தை சீன மீண்டும் தாக்கினல், அமெரிக்க ராணுவ உதவிகள் பாரதத்துக்கு உடனடியாகக் கிடைக்குமென்று அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் றஸ்க் தெரிவித்துள்ளார்.**

பாரதத்துக்கு அமெரிக்கா உதவுவது சம்பந்தமாக நிருபர்கள் மத்தியில் நேற்று அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு டீன் றஸ்க் பேசுகையில் பாரதத்துக்கு அமெரிக்கா உதவுவது சம்பந்தமாகஎந்தவிதமான காலதாமதமும் இருக்கமாட்டாதென்றும் பாரதத்தை சீன மீண்டும் தாக்கினல் அமெரிக்க ராணுவ உதவிகள் பாரதத்துக்கு உடனடியாக அனுப்பப்படுமென்றும் கூறினர்.

நீண்டகால உதவிகள் யாவும் பாரதத்துக்கு எந்த விதமான தடைகளோ இல்லாமல் கொடுக்கப்படுமென்றும் அமெரிக்காவின் இந்தஉதவிகளுக்கு எந்தவிதமான நிபந்தனையும் இருக்காது என்றும் திரு. டீன் றஸ்க் கூறினர்.

இந்திய உபகண்டத்துக்கு நேரவிருக்கும் ஆபத்துக்களை குறைப்பதற்கு பாரதமும் பாகிஸ்தானும் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டுமென்றும் அவர் கூறினர்.

## மக்கள் வங்கிக் கிளை

### காங்கேசன்துறையில் 16-ம் திகதி திறக்கப்படும்

மாவிட்டபுரம், சனி

காங்கேசந்துறையில் மக்கள் வங்கிக் கிளை இம்மாதம் 16-ம் திகதி ஆடம்பரமின்றி திறந்துவைக்கப்படவிருக்கிறது மக்கள்வங்கி ஜெனரல் மனேஜர் காங்கேசன்துறை பட்டின சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை பட்டின சபைத்தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் மக்கள்வங்கி அதிகாரிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மககள்வங்கிக்கிளையை உடனடியாகத் திறந்துவைக்குமாறு கோரியிருந்தார். இக கடிதத்திற்கு பதிலளித்து மக்கள்வங்கி ஜெனரல் மனேஜர் எழுதியுள்ள கடிதத்தில் மக்களவங்கிக்கிளையை இம்மாதம் 16-ம் திகதி சனிக்கிழமைகாலை ஒன்பதரை மணியளவில் ஆடம்பரமின்றித் திறந்துவைக்க ஏற்பாடுகள் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை மக்கள் வங்கிக்கிளையின் பட்டின சபையே முதன்முதலாக கணக்கு வைத்துக்கொள்ளுமெனத் தெரிகிறது.

## பிணையில் செல்ல கோரிக்கை

சாவகச்சேரி, சனி

சரசாலை இரட்டைக்கொலை வழக்கு நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி கோர்ட்டில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் எதிரிகளை பிணையில் விடும்படி கோரினர்.

பிணையில் விடுவது சம்பந்தப்பட்ட தீர்ப்பு இம்மாதம் 15-ம் திகதி தெரிவிக்கப்படுமென நீதிபதி கூறினர். வழக்கு இம்மாதம் 22 ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 'பாடசாலையைப் பொறுப்பேற்றதால் பிரச்னைகள் தோன்றியுள்ளன'

### தேசிய தமிழ் ஆசிரியர் சங்க கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதனுல் பல புதிய பிரச்னைகள் தோன்றியுள்ளன. இவற்றை ஆராய்ந்து சயல்படுத்தவேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்" என்று நேற்றுக்காலை நகர மண்டபத்தில் நடைபெற்ற தேசிய தமிழாசிரியர் சங்கக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. வே. கந்தர் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டதனுல் நாம் நிம்மதியாக வாழலாம் என்று நினைத்தோம். ஆனுல் நாம் எண்ணிய எண்ணமெல்லாம் பகற்கனவாகிவிட்டது என்று கூறினர்.

திரு. ஆர். கே. தியாகராசா, சங்கத்தின் விதிமுறைகளை விளக்கிக்கூறினர்.

காலமான ஆசிரியசங்கக்கூட்டு சபைத் தலைவர் திரு. எல். மேத்தானந்தாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் ஒரு தீர்மானம் சங்கக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நேற்று நடைபெற்ற சிங்களத் தகுதிப் பரீட்சைக்குப் பல ஆசிரியர்கள் தோற்றிய காரணத்தால் கூட்டத்துக்கு பல ஆசிரியர்கள் சமுகமளிக்கவில்லை.

## சிங்கள தகுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசாங்க ஊழியர்களுக்கான சிங்களத்தேர்வு ஐந்தாம் வகுப்புப்பரீட்சை நேற்றுயாழ்ப்பாணத்தின் பல்வேறு நிலையங்களிலும் நடைபெற்றது.

சிங்களத் தேர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களிற் பெரும்பாலோர் இன்று பரீட்சை எழுதினர். தமிழாசிரியர்கள் அதிகமாகக் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபையிலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள பரீட்சைக்குத் தோற்றியதாகவும், யாழ்ப்பாணம் தபாற்கந்தோரிலிருந்து சிலர் பரீட்சைக்குத் தோற்றியதாகவும் தெரிகிறது.

தமிழாசிரியர்களிற் பெரும்பாலோர் சிங்கள தகுதிப்பரீட்சைக்குத் தோற்றியது காரணமாக நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற தேசிய தமிழாசிரியர் சங்கக் கூட்டத்திற்கு ஆசிரியர்கள் போதியளவு சமுகமளிக்கவில்லை.

## யாழ்ப்பாணத்தில் தனிநாயகம் அடிகள்

மலாயா சர்வகாலாசாலையில் தமிழ்ப்பகுதித் தலைவரான வண. தனிநாயகம் அடிகள், நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார். இலங்கையில் அவர் சில நாட்கள் தங்கி இருப்பாரென்று தெரிகிறது.

## வருடாந்தக் கூட்டம்

காரைநகர், வெள்ளி

காரைநகர் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையா தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. கந்தையா, உப தலைவர்: திரு. க. நல்லதம்பி, காரியதரிசி: திரு. சு. இராசசேகரம், தனுதிகாரி: திரு. ச. விசுவநாதன், 16 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## வெடிவிபத்தில் 35பேர் மரணம்?

புதுடில்லி, மார்ச்.9

இன்று தென்னுபிரிக்காவில் உள்ள வெடிகுண்டு (டைனமைற்) தொழிற்சாலை ஒன்றில் வெடிவிபத்து நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது விபத்திஞல் 35 பேர் மரணமடைந்ததாகவும், 27 பேர் காயமடைந்ததாகவும் நம்பப்படுகிறது. ஆனுல் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கை சரியானதென ஊர்ஜிதமாகவில்லை.

இவ்விபத்திஞல் தொழிற்சாலையின் சுவர்களும், யன்னல்களும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிககப்படுகிறது.


நாசவேலையில் எவரும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

தேஜ்பூர், மார்ச். 9

நாகாலாந்துக்குப் பிரயாணமான இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன், அங்கு தனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு தேஜ்பூர் வந்து சேர்ந்தார்.

புளுக்களை அழிப்பதற்கு

BAYER



பொலிடோல்

FOLIDOL

Agents

ROYAL DISPENSARY

T'GRAMS ROYAEL

PHONE 397 JAFFNA

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

**சுபகிருது ஆண்டு மாசித் திங்கள் 26-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (10-3-63) முதல் பங்குனித் திங்கள் 3-ம் நாள் (16-3-63) சனிக்கிழமை வரை உள்ள பலன்கள்.**

### மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பொதுவாக சுபிட்ச நிலைமை, ஆதாயவரவு, எதிரிகள் வீழ்ச்சி, சுபமுயற்சிகள், நல்ல நண்பர் சேர்க்கை, குடும்பசுகம், பணநிலைமையில் சமசுகம், கமத்தொழில் கஷ்டம், உத்தியோகத்துறையில் சமசுகம், வர்த்தகருக்கு மத்தியமத்தில் உத்தமசுகம், மாணவருக்கு கல்விச் சிறப்பு, பெண்களுக்கு நீண்டபிரயாணங்களை மேற்கொள்ளல், குடும்பத்தில் நிம்மதி, தெய்வவழிபாடு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 13, 15 சுபதினங்களாகும்.

★

### இடப இராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நல்லோர் சேர்க்கை, முயற்சியில்வெற்றி, மதிப்புயர்ச்சி, சுபகருமங்கள் வீட்டில நடத்தல், தேகாரோக்கியம், குடும்பத்தில் ஒற்றுமை, பொருள்வரவு, கமத்தொழில் சிறப்பு, உத்தியோகத்தருக்கு மத்திமபலன் மாணவருக்கு கல்விச்சிறப்பு, வித்தை தமேன்மை, வர்த்தகருக்கு தொழில் விருத்தி, கடன்வரவு, பெண்களுக்கு குழந்தைப்பேறு கிட்டல், குடும்ப—சமூக மதிப்புயர்ச்சி, களத்திரநன்மை ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 11, 15 சுபதினங்களாகும்.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் எதிரிகளால் கஷ்டங்கள், வீண்வம்பு வழக்குகள், சச்சரவுகள், பொருள்நட்டம். தேகாரோக்கியம் பாதிக்கப்பட்டு அதனால் செலவு, மதிப்புக்குறைதல், இனபந்துக்கள் பகை, குடும்பச்சச்சரவு, கமத்தொழில் மத்திமபலிதம், உத்தியோகத்தருக்குச் சுபம், அதிகாரிகள் உதவி, வர்த்தகருக்கு மத்திமத்தில் உத்தமபலன் கிட்டல், பெண்களுக்கு குடும்சுகம், களத்திரபுத்திர நன்மை, மதிப்புயர்ச்சி ஆகியவகாணப்படும். இவர்களுக்கு மார்ச் 13, 15 சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் நான்காம்பாதம், பூசம், ஆயிலியம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நற்பலன் தீப்பலன் இரண்டும் கலந்துநடக்கும். பொருள்வரவுக்கேற்ப செலவும் நண்பர்கள் ஒருபுறம் உதவ மறுபுறம் எதிரிகளால் கஷ்டங்கள் விளைதலும் உறவினர் பகைக்க பொதுசனம் உதவுதலும், கமத்தொழில்— வர்த்தகம்— உத்தியோகம்— மாணவர்கள் விநிலை ஆகியன மத்திமபலிதமாகவும் பெண்களுக்கும் இவ்வாறே மததிம பலன் நடக்க இடமுண்டு. இவர்களுக்கு மார்ச் 11, 13, 15 சுபதினங்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகநலக்குறைவு, மனச்சஞ்சலம், சச்சரவு, கஷ்டபிரயாணம், தொழிலினல் மத்திம நிலமையில் பொருள்வரவு, கமத்தொழில்கஷ்டம், பொருள் நட்டம், வர்த்தகத்துறையில் கஷ்டம், பெண்களுக்கு பணமுடை, குடும்பகஷ்டம், மாணவருக்கு வித்தைத்தடை, அலைச்சல் ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 11, 15 சுபதினங்களாகும்.

★

### கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சுப-தீயபலன்கள் கலந்துநடக்கும். சிங்க இராசிக்கு எழுதிய பலன்களைகருத்துக் கெடுத்து அவதானமாக நடக்கவும். வர்த்தகத்துறை, சமத்தொழிற்றுறையில் ஈடுபட்டோருக்கு பொதுவாக மத்திம சுகமுண்டு. மாணவர்-பெண்களுக்கு நற்சுகம், இனபந்துக்கள் உதவி உண்டு. இவர்களுக்கு மார்ச் 11, 13, 15 சுபதினங்களாகும்.

★

### துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கஷ்டபலன்களே காணப்படுகின்றன. தேகநலக்குறைவு, எதிரிகளால் கஷ்டங்கள், மனச்சஞ்சலம், முயற்சிகளில் கஷ்டங்கள், சச்சரவுகள், கஷ்டபிரயாணம், விபத்துக்கள் முதலியன ஏற்படல், வர்த்தகத்துறையினருக்கு மத்திம பலிதம், உத்தியோகத்துறையினருக்கு கஷ்டம், கமத்தொழிலாளருக்கு இனபந்துக்களிடை வீண் வழக்குகளால் தொழிற்கேடு, மாணவருக்கு மத்திம சுகம், பெண்களுக்கு மாதாவழி உதவி, களத்திர நலம், மத்திமசுகம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 13-ந்தேதி சுப நாளாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கஷ்ட நஷ்டபலன்கள் சுமாராக கலந்து நிகழும். கமத்தொழில்-வர்த்தகம்-உத்தியோகம்-மாணவர் - பெண்கள் யாவருக்கும் மத்திம சுகம் உண்டு. தெய்வ வழிபாடு நன்மைதரும். இவர்களுக்கு மார்ச் 11, 13 சுபதினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகநலம், எதிரிகள் மடக்கம், நல்ல நண்பர் சேர்க்கை, சுபகருமங்கள் வீடுகளில் நடத்தல்,கமத்தொலிழில் மத்திமத்தில் உத்தம சுகம், வர்த்தகத்துறையில் கட்டுப்படுத்தப்பட்ட அளவுவருவாய், மாணவருக்குக் கல்விச்சிறப்பு, பெண்களுக்கு குடும்பச்சிறப்பு, களத்திரவழி உதவி, தெய்வ வழிபாடு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 13ந் தேதி சுபதினமாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனச் சஞ்சலம், ஏமாற்றம், சச்சரவுகள், நண்பர்-உறவினர் எதிரிகளாதல், கஷ்டபிரயாணம், தேகநலம் பாதிக்கப்படல், பணமுடை, கமத்தொழில் கஷ்டம், உத்தியோகத்தில் தொழிற் கஷ்டம், மேலதிகாரிகள் ஆதரவின்மை, வர்த்தகத்துறையில் மத்திம சுகம், பெண்களுக்கு மதிப்பு உயர்ச்சி, சந்தோஷம், நண்பர் சேர்க்கை காணப்படும். இவர்களுக்கு மார்ச் 11, 13 சுபதினங்களாகும்.

★

### கும்ப இராசி

(அவிட்டம்பின்னரை,சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பணமுடை, தேகநலக்குறைவு, கஷ்டநஷ்டமான பிரயாணம், முயற்சிகளில் தடைகள், நண்பர்-இனபந்துக்களால் வம்பு வழக்குச் சச்சரவுகள் தோன்றல்,நீசர்சேர்க்கை, கமத்தொழில் - உத்தியோகம்-வர்த்தகம்-மாணவர் மத்திம பலன்கள் நடத்தல், பெண்களுக்கு பணவரவு, பொதுவாக மதிப்பு, தெய்வ வழிபாடு காணப்படும். இவர்களுக்கு மார்ச் 11, 15 சுபதினங்களாகும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி நாலாம் பாதம் உத்தரட்டாதி,ரேவதி.)


இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் எதிரிகளால் கஷ்டங்கள், ஏமாற்றப்படல், வம்பு வழக்குகள் ஏற்படல், தேகநலம் பாதிக்கப்படல், பணமுடை, செலவதிகரித்தல், கமத்தொழில் கஷ்டம், உத்தியோகத்தருக்குப் பெரும் கஷ்டம், வர்த்தருக்குமத்திமசுகம், மாணவருக்கு கல்வித்தடை, பெண்களுக்கு கஷ்டம், குடும்பத்தில் நிம்மதியீனம் காணப்படும். இவர்களுக்கு மார்ச் 11, 15 சுபதினங்களாகும்.


ஸி. டபிள்யூ. ஈ.

உங்களுக்கு வரவழைத்துள்ள

**ஏககால ஒளி இணைப்புகள்**





கிடைக்குமிடம்:

**ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா**

85, மெயின் வீதி, : : கொழும்பு.

**ஸி. டபிள்யூ. ஈ. விற்பனை நிலையம்**

21, பிறின்ஸ் வீதி, : : கோட்டை.

REMEMBER NOW AND ALWAYS THE CWE BRINGS YOU TOP QUALITY AND VALUE


# தமிழ் மறை தந்த செல்வன்
## வையம் போற்றும் வள்ளுவனர்

— வி. என். பி. —

**எச்சமயத்தவரும், எச்சாதியினரும், எக்காலத்திலும் படித்து இம்மையிலும் மறுமையிலும் பயன் எய்தக்கூடிய திவ்விய திருமறை திருக்குறள். திருவள்ளுவ நாயனர் குருபூஜை நாளை மாசி உத்தரத்தில் அகிலமெல்லாம் கொண்டாடப்படும்.**

புகழ்பெற்ற அமெரிக்க ஜனதிபதி ஆபிரகாம் லிங்கனைபற்றி ஒரு கதையுண்டு' ஒரு பத்திரிகை நிருபர் அவரைக் கேட்டாராம்.

"ஐந்து நிமிடங்கள் பிரசங்கம் செய்யநீங்கள் எவ்வளவு நேரம் ஆயத்தம் செய்வீர்கள்?"

லிங்கன், சிறிது யோசித்துவிட்டு, "ஒரு மணித்தியாலம்" என்ருராம்.

"பத்து நிமிடப்பிரசங்கத்துக்கு?"

"அரை மணித்தியாலம்"

"ஒரு மணித்தியாலப் பிரசங்கம்செய்ய?"

"இப்பொழுதே தயார்" என்ருராம் லிங்கன்.

எவ்விஷயத்தையும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் எவ்வளவு கடினமான காரியம் என்பதை இந்தக்கதை நிரூபிக்கிறது.

தமது வாழ்நாளில் இயற்றிய ஒரேயொரு நூலில், 2660 சிறு வரிகளில், சுமார் 11,000 வார்த்தைகளுக்குள், மனிதன் இம்மையிலும் மறுமையிலும் பலன் அடையக்கூடிய வகையில், வாழ்க்கையின் இயல்புகளையும் தத்துவங்களையும் கடைந்தெடுத்துத் தந்த திருவள்ளுவநாயனரின் புலமையை நினைக்கும்தோறும்தோறும் அவரைப் போற்றி வணங்குகிரேம்; அவரை ஈன்றெடுத்த தமிழ் நாட்டை வாழ்த்துகிரேம்; அவர் பயின்ற தமிழை வியக்கிரேம். எத்துணை சிறிய நூல், எத்துணை ஆழமான கருத்துக்கள்! எம் மதத்தவராலும், எச்சாதியாராலும், எக்காலத்திலும் படித்து நலமடையக் கூடிய ஒரு திருமறையைக் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்குமுன் ஒரு தமிழ் மகன் இயற்றிப் போனன் என்பதை நினைக்கும்போது தமிழன் பண்பாடு எத்தகைய பழமை வாய்ந்ததென்று ஏங்கி, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணேம்...... யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைபபோல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை' என்று பாரதியுடன்

(8ம் பக்கம் பார்க்க)


**விற்பனைக்கு**

முந்திரிகை கன்றுகள் Red Variety) உயர்தர சிகப்பு இன இனிப்புப், பழரக, கன்றுகள். ஒன்றின் விலை 5 ரூபாய். இ. கிருஷ்ணசாமி, திருநெல்வேலி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி. 738

**தேவை**

ஆங்கிலம், சமஸ்கிருதம், புக்-கீப்பிங், சுருக்கெழுத்து தபால் மூலம் கற்பிக்கத்தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் தேவை. உடனடியாகக் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். C/o ஈழநாடு. 753

# அந்தி மயக்கம்

**மனிதன் பலவீனனாகிய போது நினைவு என்னும் மாயாவி அவனை எப்படியெல்லாமோ வதைத்து வருத்துகிறது.**

**வேலாயுதபிள்ளையின் மரணப்படுக்கையில் அதன் வடிவம் மகா கோரமாகத் தோற்றமளிக்கிறது:**

முதுமையின் தளர்ச்சி, புலன்களையும் தளரச்செய்து உடலைக் கட்டிப்போட்டிருக்க, பெரும்புயலில் வேர்கள் இற்றுப்பாறிய ஆலமரமாகப் படுக்கையில் துவண்டு கிடக்கிறார், வேலாயுதபிள்ளை. பரந்து நிழல் பரப்பி விழுதுகள் விட்ட ஆலாகத்தான் அவர் வாழ்ந்தவர். இன்று விழுதுகள் மரங்களாகிவிட, ஆல் முடிவை எதிர்பார்த்துக் கிடக்கிறது.

வேலாயுதபிள்ளைக்கு அப்படி ஒன்றும் அவ்வளவு வயதாகிவிடவில்லை. வயதுக்கும் முடிவுக்கும் எங்கே தொடர்பிருக்கிறது? கவலையின் கருங்கீறல்கள் முகத்திலே தளர்ச்சியை ஏற்படுத்த, தலைமயிர் ஒன்றுபாக்கியில்லாமல், வெண்கீற்றுகளாகிவிட்டன. கவலை எலிகளாக அடிமரத்தை அரித்து, உக்கி, விழச்செய்துவிட்டது.

படுக்கையில் விழுந்து கிடக்கிறார் அவர்.

அவர் படுக்கையைக் கறையான்களாக மொய்த்துச் சூழ்ந்து நிற்கின்றார்கள், அவர் குடும்பத்தினர். எல்லாருடைய கண்களும் கலங்கி நீரில் மிதக்கின்றன.

எல்லாரும் கலங்குகிறார்கள் என்பதை அவரால் ஓரளவு காணவும், உணரவும் முடிகிறது. இலேசான ஒரு மென்னகை இதழ்க்கோடியில் வரிவிடுகிறது.

'அழுகிறார்கள்! அழத்தானே வேண்டும்! எல்லாம் வெளிவேஷம். ஊர் உலகத்திற்காக,

**சிறுகதை**

இந்தக்கிழவன் செத்துப்போகப்போகிறானே என்று அழுகிறார்கள்! அன்பு, பாசம் என்ற தூய உணர்விலா அழுகிறார்கள்... இல்லை. எல்லாம் மாய்மாலம்...'

அவர் இலேசாக விழிமடல்களை மூடிக்கொள்கிறார்.

தலைமாட்டில் குந்தியிருந்து அழுகிறாள், அவருக்கு வாழ்க்கைப்பட்டவள். வாங்கின் வலப்பக்கத்தில் அவருடைய மூத்த மகளும், இளைய மகளும் இருந்து அவர் நிலையைப் பார்த்துக் கண்கலங்க... வாங்கின் இடப்பக்கத்திலிருந்து மூத்த மகன் விம்முகிறான். அவருடைய பேரப்பிள்ளைகள் கால்மாட்டில் நிறைந்து நிற்கிறார்கள்.

கடைசிமகன் மட்டும் அங்கில்லை.

அவனுக்கும் தந்தி அடித்திருப்பார்கள்,

அவர் மார்புக்கூட்டைத் தகர்த்தபடி இருமல் எழுகிறது.

'லொக்...லொக்'

இந்தக்குடும்பத்தைக் கட்டிக்காக்க அவர் எவ்வளவு கஷ்டங்களை அனுவித்திருப்பார். ஒன்று... இரண்டா? அவர் வாழ்ந்தது, தனக்காக வல்ல.

'ஆனா, எனக்காக யார் வாழ்ந்தார்கள்?...

'இல்லை, இல்லை...எனக்காக ஒருத்தி வாழ்ந்திருக்கிறாள்! என்ரை ஆச்சி!...நீ எனக்காகத்தானே வாழ்ந்தனி! அப்பு காரடிச்சுச் செத்துப்போக நீ என்னை வளர்க்கப்பட்ட பாடு... ஐயோ, ஆச்சி, கடேலை நீ என்னத்தைக் கண்டாய்?'

ஒளியிழந்த கண்கள் நீரை உமிழ, மடல்களின் வெடிப்புகளூடாக இமைமயிர் நனைய விழிக்குழிகளில் நீர் முட்டுகிறது.

"அம்மா! அப்பு அழுகிறாரெணை...!"

இளையமகள் குரலது. மெல்லிய துணியால் யாரோ அவர் கண்களைத் துடைத்துவிடுகிறார்கள்.

'நான் செத்துப்போவெனெண்டு, நம்பிக்கை வறண்டு போய் இருக்கிறார்கள்! நான் எப்ப கண்ணை மூடுவனெண்டு விழித்திருக்கிறார்கள்... எல்லாம் மாய்மாலம்...'

அவரது புலன்கள் மெல்ல மெல்லச் செயலிழக்கத்தொடங்குகின்றன. ஒரே களைப்பு.

"ஐயோ, என்ரை அப்பு!" என்று குரலிடுகிறாள், மூத்த மகள்.

அவருக்கு இவை கேட்கின்றன.

'அப்புவாம்... அப்பு! இவளை வளத்து ஆளாக்கி... சீதனம் கொடுத்து... காணிவளவு வீடெல்லாம் கொடுத்து ஒருவனுக்குக் கட்டிக்கொடுக்க... கள்ள வேசை! இன்று மாராலே கண்ணீர் வடிக்கிறாள்! எல்லாம் சாலம்... முழுச்சாலம்! புருஷனோடு சேர்ந்துகொண்டு வீட்டை விட்டுத் துரத்தியவளெல்லே...? நான் செத்துப்போவனெண்டு அழுகிறாளாம்?...

'ஆச்சி, ஆச்சி! என்மீது உன்னெருத்திக்குத்தானெணை அன்பு! நான் படிக்க மறுத்த போது எவ்வளவு புத்திமதிகளைச் சொன்னாய்? எனக்கொரு தொழிலைக்காட்டி... ஆயிரம் சுத்தி பத்துருபா உழைக்கச் செய்தியே? அதனாலைதானே... கலியாணம், பிள்ளை குட்டி எண்டு... இந்தக் குடும்பத்துக்காக உழைக்க வந்தது! எணை ஆச்சி, உனக்காக உழைத்து, உனக்காக வாழ்ந்து, உன்னோடு செத்துத் தொலைந்திருக்கக் கூடாதா...?'

அவர் உடற்கூட்டை இருமல் குலுக்கிறது.

"அப்பு, இந்தா இந்தப் பாலைக்குடி...!"

அவருடைய மூத்த மகன் அவரது காதில் குனிந்துகூறி, வாயருகில் பேணியை அழுத்துகிறான். அவர் தலையை ஆட்டி மறுக்கிறார்.

'பாலைக் குடிக்கட்டாம், பாலை... இவனைப்பெத்து வளத்துப் படிப்பித்து உத்தியோகம் பார்க்கவைத்து... நல்லவிடத்திலே சடங்கும் செய்துவைக்க ...வேசைமோன்! நான் ஒருக்கா துலா ஓடி விழுந்து கைமுறிந்து வேலையில்லாமல் கிடந்தபோது எட்டியும் பார்க்கவில்லை... நானும், என்ரை சின்னதுகளும் பட்டகஷ்டம்... இப்ப பாலைக்குடிச்சுச் செத்துப்போ எண்டு மாய்மாலம் போடுகிறான்...

'ஆச்சி, ஆச்சி... என்மீது உன்னெருத்திக்குத்தானெணை பாசம், பட்சம்! ஆட்டிலை கறக்கிற முழுப்பாலையும் எனக்குத் தந்திட்டு வேண்டாம் என்றாலும் வலுக்கட்டாயமாகக் குடிக்கவைச்சிட்டு — வெறும் தேத்தண்ணியைக் குடிப்பியே ... ஐயோ, ஆச்சி... இவங்களெல்லாம்...'

'லொக்... லொக்...'

இருமல் ஆளைத்தூக்கிப் போடுகிறது; அவர் சோர்ந்து தியங்கிப் போகிறார்.

"அப்பு, அப்பு... என்னை ஒருக்காப பாரெணை!..."

அவருடைய இளைய மகளின் குரலை அவருக்குத் தெரியாதா? அவர் கண்களைத் திறக்கவில்லை.

'ஒருக்காப் பாக்கட்டாம்... ஒருக்கா!... இவளிலை ஏனோ எனக்கு வலு பாசந்தான்... ஆனா, கலியாணமாகி ஒருபிடி அம்பிட்டதும்... ம்... வேசை யார் பணக்காரனுக்கு வாழ்க்கைப்பட்ட அகம்பாவம்... இவளின்ரை வீட்டுக்குப்போன என்னை 'இரு' என்று ஒரு சொல்சொல்லாமல், கால்மேலே கால் போட்டுக்கொண்டு...... கட்டையிலை போனாலும் மறப்பனே... ஒருக்கால் தன்னைப் பாக்கட்டாம் ஒருக்கா...

'ஆச்சி, நீ ஒருத்திதானெணை என்னைமனிதனாக மதிச்சவள்! எல்லாரும்அழுகிறார்கள்...மாய்மால நீலிகள்...!'

அவர் படுத்துக் கிடக்கிறார்.

"இந்த மருந்தைக் குடியுங்கோ...!"

அவர் மனைவியின் தளுதளுத்த குரல், அவர் செவிகளில் புகுகிறது. மூக்கருகே மருந்தின் நெடி.

அவர் திடீரெனக் கண்களைத் திறந்து அவளைப் பார்க்கிறார். அவள் அப் பார்வையின் தீட்சண்யத்தில் கருகிப்போகிறாள்.

'நீ தாறதையா நான் குடிப்பன்?'

அவள் பின்வாங்குகிறாள்.

'மருந்தைக் குடிக்கட்டாம், ஆச்சி! என்ரை ஆச்சி...என்னைப் பெத்தவளே... இவள் என்னை மருந்துகுடிக்கட்டாம்... இவள் தாறதையா நான் குடிப்பன்...? எணை ஆச்சி, நீ ஒரேமகன் எண்டு என்னோடை கடைசி காலத்திலை இருந்தனி... நீ நோய்வந்து படுக்கையிலை கிடந்து அழுந்த... இந்த வேசை...உனக்கு மருந்தெண்டு விஷம்தந்து கொன்றவளல்லோ...! உன்னைக் கவனமாகப் பார்த்து அனுப்பத்தானற்றவனாகப் போனேனே! உனக்கு விஷம் தந்ததுபோல எனக்குந் தரப்பார்க்கிறாளாக்கும்...'

**செங்கை ஆழியான்**

அவர் உடல் குலுங்குகிறது. கதவு தள்ளப்படும் சத்தம். சப்பாத்தின் ஒலி எழ—

"அப்பு! விழித்துப் பாரெணை ... சாமிநாதன் வந்துட்டான்!"

சாமிநாதன் — அவருடைய கடைசிமகன்.

அவர் விழிக்கவில்லை,

அவர் வாங்கருகே சப்பாத்தின் ஒலி வந்து நிற்கிறது. யாரோ வாங்கில் அமர்கிறார்கள். அவர் உடலை, முகத்தை எல்லாம் யாரோ தடவிக் கொடுக்கிறார்கள்.

கிழவர் விழிகளைத் திறக்கிறார்.

சாமிநாதன் அவரையே பார்க்கிறான்; அவன் கண்கள் கலங்கவில்லை; அவன் அழவில்லை. ஆனால், அக் கண்களில் ஒருவித நம்பிக்கை நிறைந்த பரிவு.

அவருக்குத் திகைப்பு.

'எல்லோரும் கடமைக்காக அழுகிறார்கள்! இவன் அழவில்லை... நம்பிக்கையற்றவர்கள்தான் அழுவார்களா?...'

அவர் அவனைப் பரிவோடு பார்க்கிறார்.

அப்பார்வையில் நிறைவு ஒளிர்கிறது.

'ஆச்சி! ஆச்சி!...'

புலன்கள் முற்றாகச் செயலிழக்கின்றன.

"ஐயோ! என்ரை ராசா!..."

"ஐயோ! என்ரை அப்பு!..."

"ஐயோ! அப்பு..."

"ஐயோ... அப்பு... என்ரை அப்பு!..."

# ஒரு வழிப் பாதை

வீதியோரத்து வேப்பமர நிழலில் தன் றிக்சோவில் சாய்ந்தபடியே இருந்து சில நிமிஷம் நித்திரை செய்த வடிவேலு, கண்ணை விழித்துமணிக் கூட்டுக் கோபுரத்தின் மேல் தன் பார்வையைச் செலுத்தினான்.

'மணி மூன்று நாற்பது. இன்னும் ஐந்து நிமிஷத்தில் வேம்படிப் பாடசாலை விட்டிடும்.'

தோளில் கிடந்த துவாய்த் துண்டை உதறித் தலையில் கட்டிக் கொண்டு, அரையில் கட்டியிருந்த வெலிற்றை இறுக்கிப் பூட்டிக்கொண்டு, சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு முற்றவெளி முனியப்பசுவாமி கோவிலைப்பார்த்துக் கைகூப்பி வணங்கிவிட்டு, றிக்சோவைத் தூக்கி இழுத்துச் செல்கிறான் வடிவேலு.

வேம்படிப் பாடசாலைக்கேற் அருகே நின்ற பொலிஸ்காரன் இவனைப்பார்த்துச் சிரிக்கிறான்.

தினமும் சந்திப்பதால் ஏற்பட்ட பழக்கம்.

வடிவேலு தலையில் கட்டியிருந்த துவாய்த்துண்டைக் கையில் எடுத்து பதிலுக்குச் சிரித்துத் தன் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டு பாடசாலைக் கேற் அருகே றிக்சோவை நிறுத்துகிறான்.

அட்வகேட் சுவாமிநாதரின் கடைசிமகள் இங்கு ஆறுவது வகுப்போ ஏதோ படிக்கிறாள்.

அவர்கள் வீட்டிலிருந்து காலை றிக்சோவில் ஏற்றிவந்து மாலை திரும்பவும் ஏற்றிச் சென்று அவர்கள் வீட்டில் விடுவது வடிவேலுவுக்கு போன மாதம் தான் கிடைத்த ஒருபுது வாடிக்கை.

இப்பொழுதெல்லாம் பட்டணத்தில் டாக்ஸிகள் மலிந்து றிக்சோத் தொழிலாளர்களின் உழைப்பு படுமோசமாகிவிட்டபோதிலும் வடிவேலு மற்றைய பலரைபபோல் இத்தொழிலைக் கைவிட்டு ஓடிப்போய்விடாமல் இன்னமும் அதையே நம்பியிருக்கிறான். அதில் பதினைந்து வருடகாலத்திற்கு மேலான சர்வீஸ் அவனுக்கு.

வாடிக்கை மற்றைய அன்றாட உழைப்பு எல்லாம் சேர்ந்து முழுசாக ஐம்பது ரூபாவுக்குப் பிழையில்லை. இது நேர்மையாகத் தன் குடும்பத்தை நடத்தப் போதும் அவனுக்கு!

பாடசாலை மணி ஓசை.

சிறுபிள்ளைகள் முன்னே முண்டியடித்துக்கொண்டு ஓடிவர பெரியபிள்ளைகள் அமைதியாக ஒழுக்கமாக நடந்துவந்து வெளியேறுகிறார்கள்.

**இரா. சிவசந்திரன்**

பல கார்கள் வந்து பிள்ளைகளை வாசலில் ஏற்றிச்செல்கின்றன.

கேற் அருகே நின்ற வடிவேலுவின் றிக்சோவில் அந்தப் பிள்ளையும் வந்து ஏறிக்கொள்கிறது.

பழக்கமான அந்தப் பொலிஸ்காரனைப் பார்த்து ஒரு புன்னகையை உதிர்த்து தன் தினசரி அறிமுகத்தைப் புதுப்பித்துக்கொண்டு பிரதான வீதியை நோக்கி றிச்சோவை இழுத்துச் செல்கிறான் அவன்.

* * *

அடுத்த நாளும் வழக்கம் போலவே வடிவேலுவின் வருகை.

பாடசாலைக் கேற் அருகே நின்ற பொலிஸ்காரனைப்பார்க்கிறான்.

ஆள் கறுப்பு, பெரிய மீசை, புதுப்பேர்வழி...

அப்பொழுதுதான் வடிவேலுவைப் பார்த்த அவன "டோய் மூண்டுமணிக்குப்பிறகு இதாலே வரப்படாதல்லோ, அந்தப் போட்டைப் பார்க்கல்லே? சுத்திக்கொண்டு வா! போ!" பலமாகக்குரல் கொடுக்கிறான் —புதியபொலிஸ்காரன்.

அவன் தன் கடமையைச் செய்தான்.

போனமாதம் முற்றாக இந்த வழியாகத்தான் வருகிறான். ஒருத்தரும் ஒன்றுமே சொன்னதில்லை. இன்று மட்டும்? ...

மீண்டும் வந்தவழியே போய் சந்தியில் திரும்பி, இரண்டாம் குறுக்குத் தெருவைச் சுற்றிக்கொண்டு பாடசாலைக் கேற் அருகே றிக்சோவை நிறுத்துகிறான்.

பாடசாலை விட்டானதும் அந்தப் பிள்ளையை ஏற்றிக்கொண்டு செல்கிறான்.

* * *

அடுத்த நாளும் முதல்தினம் வந்த புதுவழியாகவே பாடசாலை வாசலை வந்தடைந்தான் வடிவேலு.

கேட் அருகே நின்ற பொலிஸ்காரனை நோக்குகிறான்.

நேற்று நின்ற புது ஆள் இல்லை. அவனுக்குப் பதில் பழைய – பழக்கமான ஆள் அங்கு நிற்கிறான். இவனைப் பார்த்துச் சிரிக்கிறான் அவன்.

வடிவேலுவும்வழக்கம்போல் தன் மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறான்.

"நேற்று லீவாய்யா?" — வடிவேலு பொலிஸ்காரனைப் பார்த்துக் கேட்கிறான்.

அவன் 'ஆம்' என்பதற்குப் பதிலாகத் தலையசைக்கிறான்.

"எத்தினை மணியய்யா?"

"மூண்டரை."

'இன்னும் காமணித்தியாலம் கிடக்கு.' கேற்றுக்குத் தெற்கே சிறிது தூரத்தில் இருந்த வேப்பமர நிழலின் கீழே றிக்சோவை நிறுத்திவிட்டு அதில் இருந்தபடியே தனக்கு வசப்பட்டுப்போன நித்திரையைக் குறித்து தியானத்தில் ஆழ்ந்

(9-ம் பக்கம் பார்க்க)

# இலக்கியம்-அதற்கு உருவமும் ஒளியும்

— கா. பாலகிருஷ்ணன் —

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும் —பாரதியார்.

**சிறந்த உருவகமும் உயர்ந்த உணர்ச்சியை ஏற்படுத்தும் பொருளும் கொண்டதே இலக்கியமாகும். அது காலத்தால் சாகாது. மேலும், அத்தகைய இலக்கியம்தான் உலகில் எந்த மொழியிலும் மக்களால் போற்றி வளர்க்கப்படுகிறது........**

இலக்கியம் என்பது என்ன? கவிஞன் ஒரு பொருளைக் காணுகின்றான். அக்காட்சியினால் அவனது உள்ளத்திலே ஒரு உணர்ச்சி ஏற்படுகின்றது. அவ்வுணர்ச்சியை மற்றவர்கள் அறியும்படி எழுத்திலே படைக்கின்றான். அதைப் படிப்பவர்கள் அவன் உணர்ந்த உணர்ச்சியை அனுபவிக்க முடிகின்றது. அதுவே இலக்கியம் எனக் கருதப்படுகின்றது. அவ்வுணர்ச்சியைக் கவிஞன் உணர்ந்தவாறு எமது உள்ளத்தில் ஏற்படுத்த அவன் உணர்ந்ததுபோன்று உருவகிக்கவேண்டும். இல்லையேல் கவிஞன் உணர்ந்தது வேறு கவிதை வேறு ஆகின்றது. அப்பொழுது கவிதை அவன் உள்ளத்தில் இருந்து பூரணமாக மலராததாகின்றது. அவன் கண்ட இன்பம் மற்றவர்கள் அனுபவிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. எனவே ஒரு கவிதை கவிஞன் உணர்ந்ததை மற்றவர்களுக்கு உணர்த்தவேண்டுமானால் உருவகம் அவன் உணர்ந்தவாறு அமையவேண்டும். ஆகவே இலக்கியத்தில் உருவகம் இன்றியமையாததொரு அம்சமாக அமைகின்றது. இதல் தவறுகின்றபோது கவிதை சரியாக அமையமுடியாது. அதனால் உருவகம் கவிதைக்கு இன்றியமையாதது. அதுதான் கவிதை என்பது என் கருத்தல்ல. அத்தகைய கவிதை பூரணத்துவம் காணமுடியாததாகும். சமுதாயத்துடன் ஒட்டி வாழத் தகுதியற்றதாகின்றது. அப்படியானால் பூரணத்துவக் கவிதையின் தன்மைதான் என்ன?

கவிதையை நாம் படிக்கின்றபோது நம்முள்ளத்திலே ஒரு உணர்ச்சி ஏற்படுகின்றது. ஏற்படுத்தத் தவறுகின்றபோது கவிதை என்ற தன்மையில் இருந்து அது தவறுகின்றது. ஆகவே கவிதை என்பது படிப்பவர்கள் உள்ளத்திலே படிக்கின்றபோது ஏதோ ஒரு உணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். அவ்வுணர்ச்சி ஒன்றில் நல்லதாக இருக்கும் அல்லது தீயதாக இருக்கும். தீய உணர்ச்சியைக் கவிதை ஏற்படுத்திக்கொண்டு செல்லுமானால் அதில் பழகுகின்றவனும் தீய உள்ளம் கொண்டவனாகின்றான். காரணம், உள்ளத்தைப் பண்படுத்தும் தன்மை கலைக்கே உரியதாகையால். அத்தகைய தீய தன்மை ஒருகால் சமுதாயத்தால் உணரப்படுகின்றது. அப்பொழுது கவிதை வெறுக்கப்படுகின்றது. அவ்வெறுப்பினால் கவிதையின் உருவகம் சிறந்திருந்த போதும் கவிதை வாழாது ஒழிகின்றது. மாறாக நல்ல உணர்ச்சியுள்ள கவிதை எக்காலமும் அவ்வுணர்ச்சியை ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதன் பொருளில் எவருக்கும் வெறுப்பேற்படுவதில்லை. அதன் மீது உள்ள பற்றுத்தான் வளர்கின்றது. அந் நல் உணர்ச்சியும் நல்ல முறையில் உருவாக்கப்படுமானால் எப்பொழுதும் போற்றப்படுவதாகின்றது. இலக்கியம் காலத்தால் சாகடிக்கமுடியாததாகும். இன்று தோன்றி நாளை மறைவது இலக்கியம் அன்று.

காலவெள்ளத்தின் அலையில் மாளாது எத்தனை நாளைக்கு மிதக்கின்றதோ, அந்த அளவைப் பொறுத்துத் தான் அவ்விலக்கியத்தின் மதிப்பீடு. இதனால் தான் இலக்கியத்தைப் பற்றிக் கூறுகின்ற அறிஞர்கள் எல்லாம் காலந்தான் அதன் தரத்தைக் குறிக்கும் என்கிறார்கள். ஆகவே காலத்தால் அழிக்கமுடியாதது இலக்கியமாகும். அந்த இலக்கியம் தீய உணர்ச்சியை ஏற்படுத்தும் பொருளைக் கொண்டதாக அமைந்திருக்குமானால் அது நிச்சயம் காலத்தால் அழிக்கப்பட்டே தீரும். அப்பொழுது அது இலக்கியம் என்று பெருமைகொண்டு வாழாததாகின்றது. ஆனால் நல் உணர்ச்சி கொண்டது வாழுகின்றது. காலம் இலகுவில் அதனைக் கரைத்துவிட முடியாததாகின்றது. ஆகவே, ஓர் இலக்கியம் எவ்வளவுக்கு நல் உணர்ச்சி கொண்டதாகின்றதோ அவ்வளவிற்கே சமுதாயத்துடன் சேர்ந்து நீண்டநாள் வாழுகின்றது. இலக்கியத்தின் தன்மையில் அமைகின்றது. இதற்கு இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. வள்ளுவன் இலக்கியம் 2000 ஆண்டுகள் வாழ்ந்துவிட்டது. இன்னமும் இதற்குமேல் வாழும் என்று உறுதி கூறப்படுகின்றது. காரணம், அது கூறும் பொருள் இன்னும் 2000 ஆண்டுகளுக்கு அப்பாலும் தேவையாக இருப்பதேயாகும். ஆகவே காலம் அழிக்காத தன்மையுடைய இலக்கியம் நல்ல உணர்ச்சி தரும் பொருள் கொண்டதாக இருப்பதும் இன்றியமையாததாகின்றது.

வெறும் உருவகம் இலக்கியம் எனக் கொண்டால் அது காலத்தால் ஒழியாது வாழும் இலக்கியமாகாது என்பது மேலே கூறியதால் தெளியப்படுவதாகும். எனவே வெறும் உருவகம் இலக்கியமன்று. அதேபோன்று நல் பொருளைக் கூறுவதுதான் இலக்கியம் என்பதும் பொருந்தாததாகும். காரணம் கவிஞன் நல்ல பொருளை மற்றவர் மனம் கொள்ளச் சொல்லத் தவறுகின்றபோது அவன் தான் உணர்ந்த உணர்ச்சியைச் சொல்லத் தவறியவனாகின்றான். அந்த உணர்ச்சியை உணர்த்தவேண்டுமானால் மற்றவர் உள்ளம் கொள்ளத்தகுந்த முறையில் தான் உணர்ந்து உருவகிக்கவேண்டும். ஆகவே சிறந்த உருவகமும் உயர்ந்த உணர்ச்சியை ஏற்படுத்தும் பொருளும் கொண்டதே இலக்கியமாகும். இத்தகைய இலக்கியம் தான் உலகத்தில் எந்த மொழியிலும் மக்களால் போற்றி வளர்க்கப்படுவதாகும். இதை இலக்கிய அறிவு நிரம்பியவர்கள் எவரும் மறுக்கமாட்டார்கள். இத்தகைய இலட்சணத்தை இலக்கியம் கொண்டிருக்க, உருவகம் தான் இலக்கியம்; இல்லை, நல்ல பொருள் தான் இலக்கியம் என வாதிடுவது இலக்கியம் பற்றிய அறியாமையாக இருக்கவேண்டும். இல்லையேல் இரண்டும் இணைந்த இலட்சணம் பொருந்திய இலக்கியத்தைப் படைக்கத் தெரியாதவர்கள் தாமும் இலக்கிய ஆசிரியர்கள் எனப் போற்றப்படவேண்டும் என்பதற்காகத் தம்மால் சிறந்த உருவகத்தை ஆக்கமுடியாதவர்கள், அது இலக்கியத்துக்குத் தேவையில்லை என மறைத்துத் தம் பெயரைக் காப்பாற்றச் செய்கின்ற செயலாக இருக்கவேண்டும். இதே போன்று தான் நல்ல பொருள் தேவையில்லை என்பவர்களும் நல்பொருள் உணர்ந்து இலக்கியமாக்க முடியாதவர்களாவர். இத்தகைய ஆசிரியர்கள் உண்மை இலட்சணம் கொண்ட இலக்கியத்தை நம்மால் படைக்கமுடியாது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். அதன் உண்மைத் தன்மையை உணர்த்தி அத்தகைய இலக்கியங்கள் உருவாகத் தூண்டவேண்டும். அப்பொழுதுதான் சங்க இலக்கியம் போன்று 40-ம் நூற்றாண்டிலும் 20-ம் நூற்றாண்டு இலக்கியம் போற்றி வளர்க்கப்படும். அத்தகைய ஆசிரியர்களே உண்மையான இலக்கிய ஆசிரியர்களுமாவார்கள். நம் காலத்திலும் எதிர்காலத்திலும் வாழும் இலக்கியம் படைக்கவேண்டுமானால் இலக்கியத்தின் தன்மையை உணரவேண்டும். அது உருவகமும் பொருளும் இன்றியமையாது சிறந்து அமைவதே என்பது இக்கட்டுரையால் உணர்த்தப்படுவது மட்டுமல்ல, உண்மையுங்கூட. அதனை உணர்ந்து இலக்கிய இரசிகர்கள் ஆதரிப்பார்களானால் உண்மைத் தன்மை கொண்ட இலக்கியம் தோன்ற முடியும். இல்லையேல் நாளை நிச்சயம் அழியும் இலக்கியத்தைத் தான் காணமுடியும். அத்தகைய இலக்கியத்தை உண்மை இலக்கியம் எனக் கொண்டாடுவோமானால் எதிர்கால சமுதாயத்தில் இலக்கியத்தை உணராதவர்களாக வாழ்ந்தோம் என எள்ளிநகையாடப்படுவோம். ஆகவே பிழையாக கருத்துக்களை வளர்க்காது உண்மையை உணர்ந்து போற்றுவோமாக.

# பணம் செல்லும் வழி

— "சத்தியசீலன்" —

பெண்கள்கரம் நாமிருந்தாற்
பெரியகடை செல்வம்!
கண்கவரும் அணி, துணியிற்
கணங்கரைந்து செல்வம்!

'ஈகையர்'தம் கையிருந்து
இல்லார்கைச் செல்வம்!
ஓகையுடன் அவரருந்தும்
உண்டியெனச் செல்வம்!

கொலைஞரிடம் நாமிருந்தாற்
கொலைவழக்கிற் செல்வம்!
அலைவுசெயும் வழிகள் எவை,
அவைமுழுதும் செல்வம்!

நூலறிவார் கரமிருந்தால்
நுண்கலையிற் செல்வம்!
சீலமிலார் கையிருந்து
சிறுமை வழிச் செல்வம்!

காப்பில்லா இடமிருந்து
கள்வர்இடஞ் செல்வம்!
மூப்புடையார் தமைப்பிரிந்து
'முதுசம்' எனச் செல்வம்!

தாளாது முயலுநரைத்
தழுவி, உடன் செல்வம்!
பாழாயின் அவர்முயல்வு,
பறந்தோடிச் செல்வம்!

காதலனின் 'பரிசெ'னவும்
காதலிபாற் செல்வம்!
சாதல்வரின் அவர்க்'கிறுதி
சார்ந்தபணி'ச் செல்வம்!

இந்தவிதம் எங்கெங்கும்
எக்காலும் செல்வம்!
செந்தமிழர் திறனறிந்து
தந்தபெயர் செல்வம்.

# மரபு மாறுதல்

— பண்டிதர் வ. நடராஜன் —

இக்காலத்தில் 'மரபு' பற்றி அதிகம்பேசப்படுகிறது. மரபாவது, நம்முன்னோர் மூலம் நமக்குத் தெரிய வந்த பொருள், சொல், வாக்கிய அமைப்பு என்பன இலக்கணத்தோடு காலம், இடம் முதலிய பற்றி முரணினும் அவை இலக்கணமுடையவை போல (மரபாக)க் கொள்ளப்பட்டு அதுவே ஆதாரமாக நாமும் அவ்வாறு செய்ய வழிவகுப்பது. இத்தகையமரபு மாற்றம், காலந்தோறும் நிகழ்ந்து கொண்டே வரினும் (இலக்கியப்) பொருள்மரபு எந்நாளும் மாறுவதில்லை. ஏனெனில், இலக்கியத்தின் முக்கிய நோக்கம் மனித உளப்பண்பாட்டு முன்னேற்றம்பற்றியது. மனித உளப்பண்பாட்டுமுறையில் ஒருபொழுதும் மாற்றம் ஏற்படமுடியாதாகையால், இலக்கிய (உரி)ப் பொருள் மாறுவதில்லை. ஆயின், அறிஞர் சிலர், "இன்றைய இலக்கிய ஆசிரியர்கள், தொல்காப்பியர் கூறிய பொருளைத்தான் கூற வேண்டுமென்பது மரபன்று. இலக்கியத்தின் பொருளைத் தெரிந்தெடுப்பது புலவனின் பொறுப்பு" என்று கூறுவர். இலக்கியப் பொருளைப் புலவர் தெரிந்தெடுக்கலாம்; அதில் ஆட்சேபனையில்லை. ஆனால், அத்தெரிவு, தொல்காப்பியர் அல்லது அவர் வழிவந்த இலக்கிய நூலோர் கூறிய பொருட்குவியலுள் ஒன்றுதல் வேண்டும். இங்ஙனமில்லாதது இலக்கியமன்று.

இனி, மொழிமாற்றம் காலந்தோறும் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். இது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது.

"ஒருகாலத்து வழங்கப்பட்ட சொல் ஒருகாலத்திலிலவாதலும் பொருள் வேறுபடுதலும் உடைய. அவை: அதோளி, இதோளி, உதோளி எனவும், குயின் எனவும் இவைஒருகாலத்துளவாகி இக்காலத்திலவாயின. அவை முற்காலத்துளவென்பதே கொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா" என்ற பேராசிரியர் கூற்று இதனை வலியுறுத்தும். வீழ்ந்த சொற்களுக்காகப் புதுச் சொற்கள் தோன்றல் இயல்பு. அவ்வாறு தோன்றும் சொற்கள் ஒரு நாளிலே தோன்றுவதில்லை. பல ஆண்டு வழக்கில் வந்தவற்றை - அறிஞர்கள் ஏற்றவற்றை நூல்களுட் புகுத்துவது தவறாகாது. பழைய இலக்கண இலக்கியங்களை நன்கு கற்ற அறிஞர்கள் இக்கால மக்கள் மேற்கொண்ட கருணையால், அவர்களையும் மனத்துட்கொண்ட அனுதாபத்தால் செப்பஞ்செய்த வழக்குமொழிகள், மரபாகி இலக்கியமாகி விடுகின்றன.

நாவலர்பெருமான், இலக்கிய இலக்கணங்களைப் பயின்ற பெருமகன். அவர் மக்கள்மேற்கொண்ட கருணையால், பல மரபுகளை ஆக்கினார். அவர் மரபுகள் பலவற்றை ஏற்றுக்கொள்ளும் நம்மவருட் சிலர், அவர் வட எழுத்துக்களை, தமிழிற் சேர்த்து எழுதுவதை ஒப்புக்கொள்ளமறுக்கின்றனர்.

வடமொழிச்சொற்கள், தமிழிலே செய்யுள், வழக்கு என்பவற்றில் இடம் பெறும் என்பது இலக்கண ஆசிரியர்களது முடிபு. ஆயின் வடஎழுத்துக்களை, தமிழ் எழுத்துக் (ஒலி)களாக எழுதும்படி நன்னூல் பணிக்கிறது. இதனை மாறுபட்டு நாவலர் சில வடஎழுத்துக்களை ஒலிநுட்பம் பற்றியும் பொருள் உணர்த்தும்,ஆற்றல் பற்றியும் 'புதியன புகுதலு'க்கு இடம் அளித்தார். இதனை தனித்தமிழியக்கக் கருத்தாவான மறைமலையடிகளும் ஒப்புக் கொண்டு தாம் மொழிபெயர்த்த சாகுந்தலத்தில் 'துஷ்யந்தன்' என எழுதினார். ஆங்கில மொழியிற்கூட புதிய எத்தனையோ ஒலிகள், குறியீடுகளுடன் எழுத்துக்களாகிவிட்டன. எனவே, தமிழுடன் நாவலர் பெருமான் சேர்த்த வடவெழுத்துக்களை நாம் மரபாய்க் கொள்ளல் சாலும்.

வடஎழுத்துக்களைப் பற்றிப் பேசும்போது சில வடசொற்களைப் பற்றியும் சிந்திக்கலாம். 'தர்மம்' என எழுதுவது தமிழ் இலக்கணத்துக்கு முரணானது. ஆனால், 'அதர்மம்' என எழுதுவது முரணன்று. 'ர, ழ தனிக் குறிலணையா' என்ற நன்னூல் விதி அவ்வாறு கூறுகிறது. ஆனால், இன்று இவ்வழக்கு ஓரளவு இடம்பெறத்தொடங்கிவிட்டது.

'சக்தி', 'பக்தி' என்ற சொற்கள் 'க, ச, த, ப ஒழிந்த' என்ற நன்னூல் சூத்திரவிதிக்கு மாறானவை. அவை, 'சத்தி', 'பத்தி' என எழுதப்படுவதே முறையென்கிறது. ஆயினும், 'பயபத்தி' என்னாது 'பயபக்தி' என்னும்போது நமக்கு ஒரு பக்தி ஏற்படுகிறது. 'பராசக்தி'க்குரிய 'சக்தி' 'பராசத்தி'யில் இருப்பதாக மனம் ஒப்புக் கொள்ள மறுக்கிறது. இவ்வாறு ஏற்படும் சொல்மாற்றங்களை இலக்கணத்தில் அமைத்துக் கொள்ளும் காலம் அதிக

(9ம் பக்கம் பார்க்க)

# கலை அரங்கம்



# இந்திய படங்களுக்கு பாகிஸ்தானில் எதிர்ப்பு

கட்டழகியான ஒரு நடிகை தலைமையில் பாகிஸ்தானிகள் பெப் 22-ந் தேதி லாகூர் வீதிகளில் ஒரு கவர்ச்சிகரமான ஊர்வலம் நடத்தினார்கள். பாகிஸ்தான் படத்தொழிலைக் காக்க இந்தியப் படங்களுக்கு புதுத் தடைகள் விதிக்கவேண்டுமென்று கோரி இந்த ஆர்ப்பாட்டஊர்வலம் நடந்தது.

ஏற்கனவே இறக்குமதியான இந்தியப் படங்களையும் தடைசெய்த பாகிஸ்தான் அவசரச் சட்டத்தின் ஷரத்து செல்லாது என்று டாக்கா ஹைகோர்ட் அளித்த தீர்ப்பே இந்த ஆர்ப்பாட்டத்துக்குஉடனடிக்காரணமாகும்.

பாகிஸ்தானில் இந்தியப் படங்களை இறக்குமதி செய்வது கொஞ்சகாலத்துக்கு முன்பே அறவே நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால், சினிமாப்பார்ப்போரின் வற்புறுத்தலுக் கிணங்க தியேட்டர்கள் ஏற்கனவே இறக்குமதி செய்த பழைய படங்களைக் காட்டிவந்தன. இப்படி 50 பழைய இந்தியப் படங்கள் இருந்தன. அவைகளையும் காட்டக்கூடாதென்று பாகிஸ்தான் அரசாங்கம் ஒரு அவசரச்சட்டம் பிறப்பித்திருந்தது.

கிழக்குப் பாகிஸ்தானைப் போல மேற்குப்பாகிஸ்தானிலும் ஆகிவிடக்கூடாதே என்று பயந்துதான் பாகிஸ்தான் படத்தயாரிப்பாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தைக் கிளப்பிவிட்டார்கள்.

## விவேகானந்தர் பற்றிய துண்டுப் படம்

விவேகானந்தரின் நூற்ருண்டு விழாவை முன்னிட்டுத் தயாரிக்கப்பட்ட துண்டுப் படமொன்றை அரோரா பிலிம்ஸ் கார்ப்பரேஷன் சமீபத்தில் பத்திரிகையாளர்களுக்குத் திரையிட்டுக் காட்டியது. விவேகானந்தரின் வாழ்க்கைச் சம்பவங்கள் பலவற்றை விளக்கும் அந்தப்படம் கல்கத்தாவுக்கு அருகிலிருக்கும் பேலூர் மடத்தின் அமைப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றையும் விவரிக்கின்றது. விவேகானந்தரின் விருப்பமான பாடல்கள் சில அதில் இடம்பெற்றுள்ளன.

## நடனமாடினர் மிக நாகரிகமாகவே—கணேசன்

தமிழ் நாட்டிலுள்ளதுதான் என்ருலும் மேனாட்டுப் பாணியில் நடைபெறும் ஹோட்டல் அது. விருந்தாளியாக அங்கு வரும் நாகரிக வாலிபனை ஜெமினி கணேசன் அங்கு நடைபெறும் நடன நிகழ்ச்சியில்கலந்துகொண்டு சசி–கலா–மாலா மூவருடனும் சேர்ந்து 'கிளப் டான்ஸ்' என்ற மேனாட்டு நடனத்தை ஆடுகிருர்.

இக்காட்சியை அலங்கார் பிக்சர்சார் தமது படத்திற்காக பரணி ஸ்ருடியோவில் படமாக்கினர்.

# உயரமான நடிகர்கள்!

ஹாலிவுட் நடிகர்களிலேயே அதிக உயரமானவர்களாகக் கருதப்படுபவர்கள் ஹக்ஸ் டெனேனும், ரிச்சர்டுகீலும் தான். ஹக்கின் உயரம் 7 அடி 3 அங். ரிச்சர்ட்டின் உயரம் 7 அடி 2 அங். இருவரும் ஜெர்ரிலூயிஸின் தயாரிப்பான, 'தி நட்டி புரொபஸர்' என்ற படத்தில் நடித்திருக்கிருர்கள். இருவரும் அதில் நடித்துக் கொண்டிருக்கையில் தங்களுடன் குள்ளமான ஒருவரையும் சேர்த்துக் கொள்ளவேண்டியதாயிற்று. அவருடைய உயரமோ4 அடி 8 அங். அவர்தான் ஜுடிதோர்.

## கவிதாலயா

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கவிதாலயா புரொடக்ஷன்ஸார் தாதாமிராசி எழுதிய கதையொன்றைப் படமாக்கத் திட்டமிட்டுள்ளனர். இதில் எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஆர். ராதா, அசோகன் ஆகியோர் பிரதம பாகத்தில் நடிப்பார்கள். வசனம், பாடல்களைக் கண்ணதாசன் எழுத, விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையமைப்பைக் கவனிக்கின்றனர். பிரபல கேமரா மேன் ஜி. கே. ராமு படப்பிடிப்பையும், டி. ஆர். ராமண்ணா டைரக்ஷனையும் ஏற்றிருக்கும் பெயரிடப்படாத இப்படத்தின் படப்பிடிப்பு இந்த மாதத்தில் ஆரம்பமாகுமென்று தெரிகிறது.

## கனடாவில் இந்திய இசைப் பயிற்சி

கனடா நாட்டில் மான்டியல், மிக்ஜில் ஆகிய இரு பல்கலைக் கழகங்களிலும் இந்திய இசைக்கு நல்ல வரவேற்புக் கிடைத்துவருகிறது. 1916-ம் ஆண்டுமுதல் ஒவ்வொரு கோடைகாலத்திலும் இசைப் பயிற்சிக்கான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் அங்குள்ள மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குகொள்ளுவதுடன் ஆண்டுதோறும் பயிற்சியில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்தே வந்துள்ளது.

வகுப்புகள் நடத்தும் ஒவ்வொரு தடவையும் இந்தியாவிலுள்ள சிறந்தஇசை வல்லுனர்களை அழைத்து, இந்திய இசை பற்றிச் சொற்பொழிவுகளும், நேரடிப்பயிற்சியும் அளிக்கும்படி பல்கலைக்கழகத்தினர் ஏற்பாடு செய்கிருர்கள். 1961-ல் முதன்முதலில் நடத்தப்பெற்ற வகுப்பில் 50 மாணவர்களே பங்கெடுத்துக் கொண்டனர். ஆனால், அதற்கடுத்த ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ளது. 1961, 62 ஆகிய இரு ஆண்டுகளிலும் நடைபெற்ற வகுப்புகளில் சொற்பொழிவாற்றவும், பயிற்சியளிக்கவும் உஸ்தாத் அலி அக்பர்கான் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த இசைப்பயிற்சிவகுப்புகளை ஆரம்பிக்குமுன், பிரபல இசை ஆராய்ச்சி வல்லுனரான டாக்டர் ரோஸட்டே ரென்ஷா 1959-ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து இங்குள்ள இசைக்கலை வளர்ச்சியைப் பற்றி தெரிந்து கொண்டார்.

## சினிமா தொழில் பயிற்சி நிலையம்

வளர்ந்துவரும் திரைப்படத் தொழிலின் தேவைகளை உணர்ந்த தமிழ்நாடு அரசாங்கம், திரைப படத்தொழில் நுட்பவல்லுனர்களுக்குப் பயிற்சியளிக்கும் வசதிகளை ஏற்படுத்தியிருப்பதுடன், தொழில் நுட்பப்பயிற்சி நிலயம் ஒன்றையும் சென்னை நகரில் நடத்தி வருகிறது இப்பயிற்சி நிலயம் முனபு, பிராட்வேயில் தொழிற் பயிற்சி நிலயத்தின் (பாலிடெக்னிக்) ஒரு பகுதியாகவே இயங்கிவந்தது. இப்பொழுது படத்தொழிலுக்கான முழுவசதிகள் நிறைந்த பயிற்சி நிலயமாக மாற்றியமைககப்பட்டுள்ளது. இது தானே திரைப் படங்களைத தயாரிக்கும் அளவுககு எல்லா வகையான வசதிகளையும்பெற்றுத் தனிப் பெரும் ஸ்தாபனமாக இயங்கி வரத் தொடங்கியுள்ளது.

## கதை உரிமைக்கு 75,000 டாலர்

பேட் பூன் எழுதிய 'தியங்டி பஸ்டர்ஸ்' என்ற நாவலைப்படமாக்கும் உரிமைக்காக பிரிட்டிஷ் திரைப்படக் கம்பெனியொன்று 75,000 டாலர் கொடுக்க முன்வந்துள்ளது. பேட் எழுதிய நூல்களில் இதுவே முதன் முதலாகத் திரைப்படமாகத் தயாரிக்கவிருக்கும் முதல் புத்தகமாகும். இது பொதுவுனடமைத் தத்துவத்திற் கெதிராக இளைஞர் இயக்கம் ஒன்று உருவாவதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்.

# வீரப்பாவின் ஆசை



அருமையான இயற்கை அழகு சூழ்ந்த பகுதிகளில் காட்சிகளைப் படமாக்குவதனையிட்டு தான் மகிழ்ச்சி அடைவதாக வீரப்பா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இக்காட்சிகளைப் படமாக்குவதால் ஏற்படும் செலவு எவ்வளவாயினும் அதனையிட்டுக்கவலைப் படுவதில்லை என்றும் கூறினர்.

'ஆலயமணி'க்காக வாக்கலையில் முகாமிட்டு பலகாட்சிகளைப் படமாக்கியநான் 'ஆனந்த ஜோதி'யில் சில காட்சிகளைத் தயாரிக்க அற்புதமான இடமொன்றினைத் தேர்ந்தெடுத்துள்ளேன்.

இம்மாதத்தில் அவர் அங்கு முகாமிட்டு வெளிப்புறக்காட்சிகளைப் படமாக்கப்போவதாகவும், படத்தின் பிரதான நடிகர் நடிகையர் அனைவரும் அக்காட்சிகளில் பங்கு கொள்வர் என்றும் தெரிவித்தார்.

பி. எஸ். வீரப்பா 'ஆலயமணி' படத்தைத் தொடர்ந்து 'ஆனந்த ஜோதி' என்னும் படத்தைத் தயாரிக்கவிருககிருர். இப்படத்தில் பிரபல நட்சத்திரங்கள் நடிக்கவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொடைக்கானலில் இந்தி படப்பிடிப்பு!

பிரமோத்சக்கரவர்த்தி ஈஸ்ட்மென் வர்ணத்தில் தயாரித்து வரும் 'ஜிட்டி'படத்தின்வெளிப்புறக் காட்சிகளை கொடைக்கானல், உதகமண்டலம் ஆகிய இரு இடங்களிலும் படமாக்கத் தீர்மானித்திருக்கிருர்.

# எலிஸபெத் டெய்லரின் விவாகரத்து

எலிஸபெத் டெய்லரும் அவரது கணவன எட்டி பிஷரும் விவாகரத்துச் செய்துகொள்ளப்போவதாகப் பல மாதங்களுக்கு முன்பிருந்தே ஹாலிவுட் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது. இப்பொழுது இருவரும் பிரிந்தேவாழுகிருர்கள்.

## கொடிகாத்த வீரன்

தமிழ்நாட்டு எல்லையிலே அன்னியன் காலடி எடுத்து வைத்தவன், அத்துடன் நில்லாமல் ஆக்கிரமிப்புச் செய்துவிட்டோமென்ற ஆணவத்தில் தனது நாட்டின் கொடியை ஏற்றத் துணிந்துவிட்டான். இதனைக் கேள்வியுற்ற வீரன் புலித்தேவன் புலிபெனச் சீறினன். பாய்ந்து குதிரைமீதேறி அதனைத் தடுக்க விரைந்தான்.

அவன் ரத்தம் கொதித்தது. உடைவாளைக் கையில் எடுத்து தனது இடதுகையில் மீனை ரத்தத்தால் வரைந்து பட்டாடையைக் கிழித்து அதிலே பதியவைத்து தமிழ்வீரன் தன் மீன்கொடியை ஏற்றச் செய்தான். தன்னுட்டின் அரசியல் கொடி பட்டொளிவீசிப் பறப்பதைப் பெருமிதத்துடன் பார்த்துவிட்டே தன் அரண்மனைக்குத் திரும்பினன் புலித்தேவன்.

இந்த வீரம்மிக்க நிகழ்ச்சி அண்மையில் 'புரட்சிவீரன் புலித்தேவன்' படத்துக்காக பிலிம் செண்டரில் படமாக்கப்பட்டது. இப்படத்தைத் தயாரிப்பாளர் திரு. ஏ. ராஜராமன் டைரக்ட் செய்து வருகிருர்.

## சினிமா பத்திரிகை கட்டுப்பாடு மசோதா

இளைஞர்களின் மனதைக் கெடுக்கும் பிரசுரங்களைத்தடைசெய்யும் சட்டத்தின் கீழ் சினிமாப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த வகை செய்யும் திருததமசோதா ஒன்றை, மத்திய சட்டசபையில் பட்டாச்சாரியா என்ற அங்கத்தினர் கொண்டு வந்திருக்கிருர்.

"சினிமா பத்திரிகைகள், இளைஞர்களின் மனதை ரொம்பவும் கெடுத்துவருகின்றன. இதனுல் அவர்களின் ஒழுக்கம் கெடும். ஆகவே இப்பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தவேண்டியது அவசியம்" என்று மசோதாவின் நோக்கத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிருர்

## லதா மங்கேஷ்கர் தமிழில் பாடுவார்!

பொன்னி புரொடக்ஷன்சார் தயாரிக்கும் படத்திற்கான பிரபல வடஇந்திய பின்னணிப்பாடகி லதா மங்கேஷ்கர் தமிழில் ஒரு பாட்டைப் பாடுவார் என்று தெரிகிறது.

சிவாஜிகணேசன், ராஜேந்திரன், சாவித்திரி, புஷ்பலதா ஆகியோர் நடிக்கும் இப்படத்தை கே. எஸ். கோபால கிருஷ்ணன் டைரக்ட் செய்வார்.

## அமர் ஜோதியின் முதற்படம்

அமர் ஜோதிபிலிம்ஸின் முதலாவது தயாரிப்பு ஆரம்பமாகியுள்ளது. ஜெமினிகணேசன், ரங்கராவ், வி. கே. ராமசாமி சம்பந்தப்பட்ட சில காட்சிகள் ஆரம்பதினத்தன்று படமாக்கப்பட்டன. திரு. கே. எஸ். கோபால கிருஷ்ணன் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஏற்றுள்ளார்.

இப்படத்தின் மூலம் ஒரு நல்ல குழந்தை நட்சத்திரத்தையும் கோபாலக்கிருஷ்ணன் அறிமுகம்செய்து வைக்கவிருக்கிருர்.

## ரசிகரஞ்சனசபா இசைவிழா

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபாவின் 12-வது ஆண்டு இசைவிழா அடுத்த மாதம் 18-ம் திகதி ஆரம்பமாகி 22-ந் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

வழமைபோல் இம்முறையும் வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராசப்பெருமாள் கோவில் முன்றலில் அமைக்கப்படும் அலங்காரப்பந்தலில் விழாநடைபெறும். ஈழத்து இசைக்கலைஞர்கள்பலா கலந்துகொள்வர்.

## புதிய படம்

"கலேணே கத்தி இந்தா" (ஹியர் இஸ்தி நைஃப் டியர்) என்ற பெயரில் திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த மர்மக் கதை ஒன்றை ஜேம்ஸ் ஸாங்ஸ்டர் தயாரித்துக்கொண்டிருக்கிருர். அவரே வசனமெழுதியுள்ள இந்தப்படம் ஃபிரெட்டி ஃபிரான்ஸிஸ் டைரக்ஷனில் வளர்ந்துவருகிறது. இளம் பெண்ணொருத்தி அவன் கனவுகளில் தோன்றும் ஒரு முகமூடியணிந்தபெண் உருவத்தால் பயமுறுத்தப்பட்டு கிலிககாளாகிருள். அந்த மர்ம உருவம் சில சமயங்களில் உயிருள்ளது போலவும், சில சமயங்களில் கத்தியால் குத்தப்பட்ட ஒரு பிரேதமாகவும் அவளுக்குத் தென்படுகிறது.

## கழிவுப் பொருள்கள் கலைச் செல்வங்களாகின்றன

மோகு ஜெர்மன் கிராமங்களில் 'வேண்டாம்' என்று ஒதுக்கப்பட்ட கழிவுப் பொருள்களை சிலர் வாங்கி புதுப்பித்து கலைச்செல்வமாக்கி அதிக விலைக்கு விற்று நல்ல லாபம் சம்பாதித்து வருகின்றனர்.

செம்பு பாத்திரங்கள், பழங்காலத்து மேஜை நாற்காலிகள், மண் பாண்டங்கள் உடைந்த சர்க்காக்கர், பழைய துப்பாக்கிகள் இம்மாதிரி சகலமான பொருள்களும், கிராமங்களிலுள்ள வீடுகளில் வாங்கப்பட்டு வருகின்றன. கிராமவாசிகளும் தங்களிடமுள்ள ஓட்டை உடைசல்கள் விலைபோகின்றனவே என்ற சந்தோஷத்துடன் வந்த விலைக்கு விற்றுவிடுகிருர்கள். பல ஜெர்மன் வீடுகளில் இந்த கழிவுச் சின்னங்கள் கலைப்பொருள்களாகமாறி கண்ணைக்கவரும் வகையில் இடம்பெற்றுள்ளன.

பிராங்கோனியா என்ற நகரத்தைச்சேர்ந்த மியூஸியம் கியூரேட்டர் ஒருவர் இந்த மாதிரியான கலைச்செல்வங்களை விற்றுவிடவேண்டாம் என்று கிராம மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர். கிருத்துவ ஞானிகள், மடோனு உருவச் சிலைகள் எல்லாமே வந்த விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. இந்த உருவச் சிலைகள் மிகவும் அபூர்வமானவை, கலையழகுடையவை என்று கிராமவாசிகள் இப்போது விழித்துக்கொண்டு விட்டார்கள். இப்பொருள்களை விற்பதாக அருந்தாலும் அதிக விலைக்கே விற்கிருர்கள்.

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 26 (10-3-63)

## நாளென் செயும்?

சென்ற வெள்ளிக்கிழமையன்று குருபகவான் கும்பராசியிலிருந்து மீன ராசியில் பிரவேசித்தாராம். அதன் பயனாக நம்மில் சிலருக்கு நன்மையும், சிலருக்குத் தீமையும் விளையுமென்று சோதிட சாத்திரம் கூறுகிறது.

சோதிடம் உண்மையா, இல்லையா என்ற தர்க்கவாதத்தில் நாம் இறங்க விரும்பவில்லை. சரியாகவோ தவறாகவோ பொதுமக்களில் பலரும் சோதிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். நம்பிக்கை இல்லை என்று கூறுபவரும்கூட, தங்கள் சொந்தப் பலனைப்பற்றி அறிவதில் ஆவல்கொள்ளுகின்றனர்.

தனிப்பட்டவர்களை கிரகங்கள் ஆட்டுவது போல் நாடுகளையும் அவை ஆட்டிவைக்கின்றனவாம். இலங்கை, இந்தியா இவைபற்றி 'சப்தரிஷிவாக்கியங்கள்' கூறும் தீர்க்கதரிசனங்களைத் தாம் படித்ததாயும், இங்கு 1915, 58 வருடங்களில் நடந்த கலகங்களைப்பற்றி அவை அப்படியே விவரித்துள்ளதாகவும் கொழும்பிலிருந்து ஓர் அன்பர் எழுதுகின்றார். 1956 முதல் 64 வரை இலங்கைக்கு மிக இருள்சூழ்ந்த காலமென்றும் பிறகு மிக நல்ல காலம் வருவதாகவும் அந்த ரிஷி வாக்கியம் கூறுகிறதாம். இரண்டு வருடங்கள் நாம் என்ன அவதிப்பட்டாலும், பிறகு நன்மை வருவதாயின் அது வரவேற்கத்தக்கது தானே.

வியாழபகவான் ஏன் இப்படி மாறவேண்டும்? இதனால் நம்மில் சிலருக்கு ஏன் நன்மையும் சிலருக்குத் தீமையும் ஏற்படவேண்டும்? இந்தப் பாரபட்சங்கள் அவருக்கு ஏன்? தீய பலன்கள் நம்மைப் பாதிக்காமல் தடுத்துக்கொள்ள முடியுமா? அப்படியாயின் என்ன செய்யவேண்டும்? என்று பல முக்கிய கேள்விகள் எழுகின்றன.

மதுரையிலிருந்து கிடைத்த அழைப்பை ஞானசம்பந்தர் ஏற்று, அங்கு செல்ல நாவுக்கரசரிடம் விடைபெற்றபோது, நாளும் கோளும் சரியில்லை என்று வாகீசர் எச்சரித்தாராம். ஆனால், வேயுறுதோளி பங்கன், தன் உளமே புகுந்த அதனால், ஞாயிறு, திங்கள்......... முதலிய கோள்களெல்லாம், நல்ல நல்லவென்றும் அவை அடியார்க்கு மிகவே நல்லநல்லவென்றும் உறுதியுடன் பதிலளித்து மதுரை சென்றார். எச்சரிக்கையின்படி பல இன்னல்கள் ஏற்படினும் முடிவிலே ஆலவாய் அரன் முன்னிற்ப, வெற்றியடைந்தாரென்பது கதை. கோள்கள் ஞானசம்பந்தர், அப்பர் போன்ற சமய குரவர்களையே ஆட்டிவைத்திருக்குமாயின், மற்றவர்களைப் பற்றிக் கேட்கத் தேவையில்லை. இதில் நம்பிக்கையில்லாத பிரதமர் நேரு போன்றவர்களுக்கும் எதிர்பாராத பெரிய பல இன்னல்கள் ஏற்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம்.

வினைகள்தான் இதற்குக் காரணமென்றும், யாரும் தங்களது வினைப்பயன்களை அனுபவிக்கத்தான்வேண்டுமென்றும் திருவள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். ஆனால் அவரே நம் மனக்கவலைகள் நீங்க, தனக்குவமை இல்லாதான் தாள் சேரவேண்டுமென்று கூறி, கவலை நீங்க வழிகாட்டியுமிருப்பது குறிப்பிடத்தக்கது.

தேவார திருமுறைகளில் நம்பிக்கையற்றவர்களும் கூட, உலகமக்களின் வாழ்வுக்கு பொது அறநூல் வகுத்த திருவள்ளுவரின் வாக்கை மறுக்கமுடியாது. மனத்துக்கண் மாசிலனாகி, நல்லறம் செய்தல் வேண்டுமென்றும், தீமை செய்தார்க்கும் நன்மையே செய்தல் வேண்டுமென்றும் இடித்து இடித்துக் கூறி இருக்கின்றார். நம் மனதை இப்படிப் பக்குவப்படுத்திக்கொள்ள நம் சொந்த முயற்சி மட்டும் போதுமா? திருவருள் துணை வேண்டுமென்பதை அறிவுறுத்தவே, தாம் வகுத்த அறநூலின் முதல் அதிகாரத்திலேயே கடவுளுக்கு முதலிடம் தந்துள்ளார்.

நாளை திங்களன்று திருவள்ளுவ நாயனாரின் குருபூசை. அவர் காட்டிய வழியிலே நடந்து, திருவருளைத் துணைபெற்று, அறவாழ்வு வாழ்பவரை, நாள் என்செயும், வினைதான் என்செயும், நாடிவந்த கோளும், கொடுங் கூற்றும் என்செயும்?

### இரத்தினக் கம்பளம்

## பத்திரிகைப் பீ(ஷ்)ம சேனர்

இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒரு சிறுகதைப்போட்டியை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இந்தக்கனகாபிஷேக மகோற்சவம்பற்றிய அறிவிப்பு இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது.

இந்தவேளை, அநேகமாய் 25 ஆண்டுகளுக்கு முன்பு பொதுவாக பேனைத்தொழில் அதிலும் முக்கியமாக சிறுகதை இலக்கியம் நமது நாட்டில் எத்தகைய நிலையில் இருந்ததென்பதை நினைவுபடுத்திப்பார்க்கத் தோன்றுகிறது. ஒரு நண்பர் கூறிய வேடிக்கையான கதையும் ஞாபகத்துக்கு வருகிறது.

நண்பர், ஒரு பத்திரிகையில் வேலைபார்த்து வந்தார். அது ஞாயிறு வெளியீடு. பத்திரிகையின் சொந்தக்காரர் ஒரு தினம் நண்பருக்கு ஆள் அனுப்பி அவரை வரவழைத்தார். அந்தவாரத்துப் பத்திரிகை வெளியாகி இருதினங்களேயாகியிருந்தன. பத்திரிகையும் கையுமாக நின்ற அதிபரைப் பார்த்தபோது நண்பருக்கு மனம் 'திக்' கென்றது. பத்திரிகையில் வெளியாயிருந்த கதை கட்டுரைகளில் ஏதும் வம்பு தும்பு ஏற்பட்டிருக்குமோ அல்லது மோசமான அச்சுப் பிழைகள் ஏதும் அவர்கண்களில் பட்டிருக்குமோ என நண்பர், பலவாறாக எண்ணமிட்டார்.

அதிபர் அந்தவாரம் வெளியாகியிருந்த சிறுகதைப்பக்கத்தைப் பிரித்தார். நண்பரைநோக்கி "இது நீங்கள் பார்த்து வெளியிட்ட சிறுகதைதானே?" என்று கேட்டார். நண்பர் ஒப்புக்கொண்டார். "இதை எழுதியவரின் விலாசம் உங்களிடம் இருக்கிறதல்லவா?"

"இருக்கிறது."

"பத்திரிகை அதிபர்சந்திக்க விரும்புகிறார்என்று அவருக்கு நாளைக்கே ஒரு கடிதம் எழுதிப்போட்டுவிடுங்கள்."

"செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு நண்பர் வேகமாகத் திரும்பி அந்தச்சிறுகதையின் கைஎழுத்துப் பிரதியை எடுத்துக்கொண்டு திரும்பவும்அதிபரைப்பார்க்க விரைந்தார்.

அதிபரிடம் கையெழுத்துப் பிரதியைக்கொடுத்து "இதுதான் அவர் எழுதிய சிறுகதை. இதிலேயே விலாசமும் எழுதியிருக்கிறார்" என்றார்.

அதிபர் அந்தக் கையெழுத்துப் பிரதியை வாங்கிப் பார்த்தார். நண்பரை உட்காரும்படி கூறினார்.

கையெழுத்துப் பிரதியைப் புரட்டிப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்துக்கொண்ட அதிபர் "இதுதான் அவர் எழுதிய சிறுகதையா? இப்படித் தாறுமாறாக வெட்டிக் கிறுக்கிவைத்திருக்கிறீர்களே, கதையில் பாதியை நீங்களே எழுதியிருக்கிறீர்கள். இப்படியேதான் கம்போஸ்செய்யக் கொடுத்தீர்களா?" என்று நண்பரைப் பார்த்து மீண்டும் கேட்டார்.

"ஓர் இரண்டு நிமிஷம்" என்று சொல்லிவிட்டு நண்பர் எழுந்து தமது மேசைக்குச் சென்று அதேபோல மற்றொரு எழுத்துப் பிரதியைக்கொண்டு வந்து அதிபரிடம் கொடுத்தார். கொடுத்துவிட்டு "கம்போஸ் செய்யக்கொடுத்த எழுத்துப் பிரதி இதுதான்" என்றார்.

அதைப்பார்த்தமாத்திரத்தே "ஆனால் இது முழுவதும் உங்கள் கையெழுத்தாக இருக்கிறதே" என்று ஆச்சரியப்பட்டார் அதிபர்.

நண்பர் உள்ளதை உள்ளபடி சொன்னார். "முதலில் அவர் எழுதியதைத் திருத்தி அடித்துப்பார்த்தேன். சரிவரவில்லை. பிறகு கதையில் பாதியை என்கையால் எழுதிச் சேர்த்தேன். அதுவும் நன்றாக அமையவில்லை—"

"ஆகவே உங்கள் கைப்பட முழுசாக ஒரு கதையை எழுதி அவர் பெயரில் போட்டிருக்கிறீர்கள், அப்படித்தானே? நல்ல ஆளையா நீர். இவரை வரவழைத்துப்பேசுவது வீண்வேலை இவருக்குக் கடிதமெழுதிப் பிரயோசனப்படாது. அவர் நமக்கு எந்த வகையிலும் உதவக்கூடுமென்று தோன்றவில்லை" என்று சொல்லிக்கொண்டே வெளியே நடந்தார் அதிபர்.

இது முதலாக இந்த நண்பர் நீண்டகாலமாய் தமது வேலைகளுக்கு ஒரு நல்ல உதவி ஆள் நியமனம் ஆகாமலே வேலைபார்த்து வந்தார்.

தமிழ் பத்திரிகைப் பீ(ஷ்)ம சேனர்களில் ஒருவரான இந்த நண்பர் இம்மட்டில் ஆயிரம் சிறுகதைகளைத் தமது கையால் பிரசுரித்த பெருமைக்கு உரியவராகிறார். ஆயிரம் சிறுகதைகளைப் பிரசுரிப்பதற்கு அவர் ஐயாயிரம் சிறுகதைகளை எழுத்துப்பிரதிகளாகவே படித்துப் பார்த்திருக்கவேண்டும். வாழ்க அவர் பொறுமை!

இலங்கை எழுத்தாளர் சங்கம் நடத்தும் சிறுகதைப் போட்டியில் இவரது பெயரில் ஒரு பரிசு வழங்க ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும். இருக்காதா? எப்பொழுதோ ஒரு தடவை ஒரு சிறுகதைப் போட்டியில் இவர் பரிசுபெற்றிருந்ததாகக்கூட ஞாபகமிருக்கிறது.

—"நீலாம்பரி"

## "சீனாவின் ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும்"

—சைப்பிரஸ் துணை அதிபர்

## 'படையெடுப்பின் மூலம் கொள்கை பாதிக்கப்படவில்லை'

—ஸாகிர் ஹுசைன்

புதுடில்லி, மார்ச் 9

"பாரதத்துக்குரிய பிரதேச பகுதிகளை படைபலம் மூலம் சீனா ஆக்கிரமிப்புச் செய்ய முயன்றது ஒரு வருந்தத்தக்க செயலாகும். இது நிறுத்தப்படவேண்டும். பல சர்வதேச நெருக்கடிகளைப் பாரதம் சமாதான முறையில் தீர்த்துவைத்திருக்கிறது." என்று பாரதத்துக்கு விஜயம் செய்த சைப்பிரஸ் துணை அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரவு புதுடில்லியில் அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் சைப்பிரஸ் துணை அதிபர் தொடர்ந்து பேசுகையில், சீன—இந்திய எல்லைத் தகராறை சமாதான முறையில் தீர்த்துவைக்க பாரதம் விரும்பும்பொழுது அதற்கு சீனா இணங்காது இருப்பது வரவேற்கத்தக்கதோர் செயலல்லவென்றும், சைப்பிரஸ் மக்கள் பாரதத்தின்மீது நல்லெண்ணம் கொண்டிருக்கிறார்களென்றும் சைப்பிரஸின் ஆதரவு பாரதத்துக்கு எப்பொழுதும் உண்டு என்றும் கூறினார்.

சைப்பிரஸ் துணை அதிபரை வரவேற்றும் இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசைன்பேசுகையில், நடுநிலைமைக் கொள்கையினின்றும் பாரதம் தவறிவிடவில்லையென்றும் இக்கொள்கையைத்தான் பாரதம் தொடர்ந்தும் கடைப்பிடித்து வரும் என்றும் கூறினார்.

'சீனாவின் படையெடுப்பினால் பாரதத்தின் கொள்கைகள் பாதிக்கப்படவில்லை. பாரதம் என்றும் சமாதானத்தைத்தான் விரும்பும். ஆனால் சீனாவின் ஆக்கிரமிப்புக்கும், பயமுறுத்தலுக்கும் பாரதம் ஒருபோதும் அடிபணியாது என்றும் உப ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசைன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சீன—இந்திய எல்லைத் தகராற்றை சமாதானமாகத் தீர்த்துவைக்கும்பொருட்டு கொழும்புநாடுகள் கூறிய யோசனைகளைப் பாரதம் முழுமையாக ஏற்றுக்கொண்டதென்றும் ஆனால் இந்த யோசனைகளை முன்னர் வரவேற்ற சீனா, பின்னர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது என்றும் கூறினார்.

## மணிலாவில் சுபந்திரியோ

மணிலா, மார்ச் 9

இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ மணிலா வந்துசேர்ந்தார். மலேசியாப் பிரச்னை அமைதியான முறையில் தீர்க்கப்பட முடியுமென்று டாக்டர் சுபந்திரியோ கருத்துத் தெரிவித்தார்.

## ஷோம்பே பயணம் ஒத்திவைப்பு

பாரிஸ், மார்ச் 9

கடாங்காவின் முன்னாள் அதிபர் திரு. மொயிஸ் ஷோம்பே திடீர் சுகவீனம் காரணமாக எலிஸபெத்வில்லிக்குச் செல்லும் தமது திட்டத்தை ஒத்திவைத்துள்ளார்.

## கல்வி இலாகா அதிகாரியுடன் பேட்டி

திருக்கோணமலை, சனி

கல்வி இலாகா அதிகாரி திரு. இராஜகாரியாரை சாம்பல்தீவு கிராமச் சங்கத் தலைவர் திரு. வ. நா. தம்பிராசா, முன்னாள் சாம்பல்தீவு கிராம சபைத் தலைவர் திரு. சி. மயில்வாகனம், திவ்ய ஜீவன சங்க பொக்கிஷாதிபர் திரு. தம்பிஐயா ஆகியோர் திருமலை எம். பி. திரு. என். ஆர். இராஜவரோதயம் தலைமையில் பேட்டி கண்டனர். சாம்பல்தீவு மெதடிஸ்த மிஷன் பாடசாலையைச் சிரேஷ்ட பாடசாலையாக்குமாறும், சங்கீத ஆசிரியை ஒருவரை சாம்பல்தீவு பட்டினசபை எல்லையிலுள்ள மூன்று பாடசாலைகளில் ஒன்றில் நியமித்துத் தரும்படியும், மெதஸ்டிஸ்த மிஷன் பாடசாலைக் கட்டிடங்கள் மோசமடைந்துள்ளதால், அரசாங்கம் அதற்கென ஒதுக்கியுள்ள பணத்தை நல்ல துறையில் செலவழிக்கும்படியும் கேட்டுக்கொண்டனர்.

கல்வி இலாகா அதிகாரி திரு. இராஜகாரியர் இதுசம்பந்தமாகத் தான் பார்வையிடுவதாகவும் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி கூறினர்.

## இடமாற்றமில்லை

கொழும்பு, சனி

காலி உதவி கல்வி டைரக்டர் திரு. டபிள்யு எம். வர்ணகுரியா இடமாற்றம் செய்யப்படமாட்டார் என்று கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மஹ்மூத் அறிவித்துள்ளார்.

காலி உதவி கல்வி டைரக்டரை இடமாற்றம் செய்யும்படி தென்மாகாணத்தைச் சேர்ந்த ஒன்பது எம். பி. க்கள் கல்வி மந்திரியைக் கேட்டிருந்தனர். இவர்களைவிட தென்மாகாணத்தைச் சேர்ந்த ஆறு எம். பி. க்கள் அவரின் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

# உலகமேடை

டி. எம். எம்.

## இந்தியாவுக்கு அபாயம்?

கல்கத்தாவில் நாளை நடைபெறவிருக்கும்காஷ்மீர் பேச்சுக்கள் எப்படியிருக்கும்? பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி புட்டோ பீகிங் சென்று சீனவுடன் எல்லை ஒப்பந்தம் செய்துகொண்டபின், கல்கத்தாவருகிறார். எனவே இந்தோ-பாகிஸ்தான் பிரதிநிதிகள் மகாநாட்டு மேசையில் எப்படி விழித்துக் கொள்வார்கள் என்பது தெரியவில்லை. இருவர் மனதிலும் எவ்வளவு தூரம் அந்தரங்க சுத்தி இருக்கும் என்பதும் மனோதத்துவ சிந்தனைக்குரியது.

கடந்த 15 ஆண்டுகளாக நீடித்துவரும் காஷ்மீர் பிரச்சினையில் ஒரு நல்ல திருப்பத்திற்கான அறிகுறிகள் தென்பட்டபோது, பாகிஸ்தான் இவ்வித நடவடிக்கையில் ஈடுபட்டது. இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றுக்கொன்று வக்கரித்துக் கொண்டிருந்த நிலையில், அவைகளைச் சந்திக்கச் செய்ய பெரும் சர்வதேச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து, நடைபெற்ற 3 மகாநாடுகளிலும் இந்தியாவின் கருத்துக்களைபாகிஸ்தான் நன்கு அறிந்துகொண்டது. பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர், சட்டரீதியாக தனக்குச் சேரவேண்டும் என இந்தியா கூறிவந்த போதிலும், காஷ்மீரைப் பிரிவினை செய்யும் யோசனைகளை இருதரப்பினரும் ஆராய இந்தியா சம்மதித்தது. அதாவது, எல்லையில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் இந்தியா இறங்கிவந்தது. இந்தப் பலவீனத்தை பாகிஸ்தான் இப்போது நன்குபயன்படுத்திக் கொண்டுவிட்டது. இவ்வளவு காலமும் சீனவுடன் வாயளவிலன்றி, ஆக்கபூர்வமான முறையில் எல்லை ஒப்பந்தத்தை அது செய்து கொள்ள முன்வரவில்லை. ஆனல், காஷ்மீர் பிரிவினைக்கு இந்தியா இணங்கும் என்ற உண்மை வெளிப்பட்டபின், பாகிஸ்தான் தைரியமாகஎல்லை ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டது. மற்றொரு வழியில் சொல்லப் போனல், காஷ்மீர்பிரிவினை நிச்சயம் என பாகிஸ்தான் உறுதிகொண்டிருக்கிறதுஎன்ற உண்மை இதன் மூலம் வெளியாகிறது. அப்படிப் பிரிவினை ஏற்படுமானல், காஷ்மீரில் சீனவுக்கு விட்டுக்கொடுத்துள்ள பகுதிகள் பாகிஸ்தானைப் பொறுத்ததாகவே இருக்கும்.

எனினும் இந்தக் கட்டத்தில் பாகிஸ்தான், பீகிங்குடன் இவ்வாறு நடந்துகொண்டதிலிருந்து, காஷ்மீர் பிரச்சினையை உண்மையில் தீர்க்கும்எண்ணம் அதற்கு இருக்கிறதா என்ற சந்தேகம் உண்டாகியிருக்கிறது. சீனவுடன் எல்லை ஒப்பந்தத்தைச்செய்துகொண்டாகிவிட்டது. இனி அப்பகுதியில் அபாயம் கிடையாது. சீட்டோ, சென்டோ அங்கத்துவநாடான பாகிஸ்தானைத் தாக்கும் தைரியம் சீனவுக்குக்கிடையாது. அப்படித் தாக்குவதாக வைத்துக்கொண்டாலும், இந்தியாவை ஒருகை பார்ப்பதற்குமுன் சீன அப்படிச் செய்யாது. அதுவரை பாகிஸ்தான், கெடுபிடி நடத்தி காஷ்மீரில் முடிந்த அளவுபேரம் செய்துகொள்ளப் பார்க்கும் என்று கூறவும் இடமுண்டு.

இந்தியாவின் கருத்துப்படி, சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம், "கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தது போல்" ஆகும். ஏனெனில், சட்டரீதியான இந்தியப் பகுதியை அந்நியநாடுகள் பங்குபோட்டுக் கொண்ட செயலே அது.

இந்தியா பிரிவினை செய்யப்பட்டபோது, சுதேச சமஸ்தானங்களை இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் சேர்க்கும் அதிகாரம் அந்தந்த மகாராஜாக்களுக்கே உண்டு என்னும் ஒப்பந்தத்தை பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஒப்புக் கொண்டன.

காஷ்மீரில் மலைஜாதியினர் படையெடுத்து வந்த சமயம், காஷ்மீரை அதன் மகாராஜா இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். ஒப்பந்தப்படி இந்த அதிகாரம்சமஸ்தானதிபதிகளுக்கே இருந்தது. எனவே பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர், சட்டப்படி இந்தியாவுக்குச் சேரவேண்டியதாயிற்று. இப்போது அதன் ஒருபகுதியைத் தான், பாகிஸ்தான் சீனவுக்குத் தாரை வார்த்திருக்கிறது. அதுவும் எந்த நிலையில்?

இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளில் சீன, பாகிஸ்தான் இரண்டுமே அபாயமாக விளங்குகின்றன. போதாததற்கு, இந்தியாவைச் சுற்றி பர்மா, இந்தோனேஷியா உட்பட எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ நடவடிக்கைகள் வெகுவாக அதிகரித்துவருகின்றன. இந்தியாவைச் சுற்றி ஒரு அபாய அரண் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆசியாவிலிருந்து இந்தியாவை ஒதுக்கும் முயற்சியில், ராணுவரீதியில் தோல்வியடைந்த சீன, இப்போது ராஜதந்திரரீதியில் தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது.

இந்த நோக்கத்தை அடைய சீன சகல வழிகளிலும் இப்போது தயாராகிவருகிறது. சகலநாடுகளிலும் குறிப்பாக ஆசிய ஆபிரிக்க நாடுகளில் தீவிர இந்திய விரோதப் பிரசாரங்கள் நடைபெற்றுவருகின்றன. இந்தியா, உலகநாடுகளிடையே மகத்தான நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பியுள்ளதாகையால், அதைத்தகர்ப்பதற்கு தொடர்ந்து பலகாலம் தீவிரமுயற்சி செய்தாகவேண்டும். இந்தப் பணியைத்தான் சீன, பலவழிகளில்நிறைவேற்றிவருகிறது. ஒலிபரப்புக்களிலும், பத்திரிகைகளிலும், வெளிநாட்டில் ராஜதந்திரதூதராலயங்கள் மூலமும், இந்திய எதிர்ப்புப் போரை அது தொடங்கியுள்ளது. ராஜதந்திர முயற்சிகளின் மூலம் இந்தியாவைத் தனிமையாக்கிவிட்டால், பின் அதைத்தாக்குவது சுலபமல்லவா? எனவேதான்நேரடிப் பேச்சுக்காக எவ்வளவுகாலமும் பொறுத்திருக்கத் தயார் என சீன கூறியுள்ளது.

நடைமுறையில் சீனதான் உலகநாடுகளிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேற்குநாடுகள் மட்டுமின்றி, கம்யூனிஸ்ட்நாடுகளும் இப்போது அதனுடன் பிணக்கு கொண்டிருக்கின்றன. "நான் உலகத்தில் இருக்கிறேன்" என்று காட்டுவதற்காகவே சிலவருஷங்களாக பல நாடுகளுடன் அது கெடுபிடியை நடத்திவருகிறது. இதனல் முன்னைப்போல் அல்லாமல், இப்போது சர்வதேச அரங்கில் சீனவின் பெயர் அடிக்கடி அடிபட்டு வருகிறது. தான் புறக்கணிக்க முடியாத ஒருநாடு எனக் காட்டுவதே சீனவின் நோக்கம். "அமெரிக்க ஏகாதிபத்தியம்", இந்திய எதிர்ப்பு, சர்வதேச கம்யூனிஸ தலைமைப் பதவி ஆகிய மூன்றுமுனைகளில் சீன இப்போது கடும்போராட்டம் நடத்திவருகிறது.

சீனவுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுத்தலைவர்கள் மிகவும் குறைவு. அங்கு இப்போது யார் எந்தச் சந்தர்ப்பத்தில் விஜயம் செய்தபோதிலும் பெரியவரவேற்புக்கிடைக்கும். சீன சமாதானத்தில் அக்கறை கொண்டிருக்கிறதுஎனக் காட்டுவதும், இவ்வித சந்தர்ப்பங்களை ஒரு பிரசார மேடையாகப் பயன்படுத்திக்கொள்வதுமே அதற்குக்காரணம்.

இலங்கைப் பிரதமருக்குப் பீக்கிங்கிலும், புதுடில்லியிலும் அளிக்கப்பட்ட வரவேற்பில் பாரதூரமான வித்தியாசம் இருந்தது. ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நாட்டுத் தலைவரின் ராஜாங்க விஜயத்தைப்போல் அவருக்கு பீக்கிங்கில் வரவேற்புகள் அமைந்திருந்தன. கொழும்பு யோசனைகளைத் தெரிவிக்கச்சென்ற பிரதமர் மட்டுமின்றி, அதற்குப் பின்சென்ற கொழும்பு நாடுகளின் சாதாரண மந்திரிகளுக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களைக்கொண்டும், ராஜாங்க வரவேற்புகளும், விருந்துபசாரங்களும் நடத்தப்பட்டன.

இந்த வைபவங்களிலெல்லாம் "சீனவின் சமாதான நோக்க"மும், இந்தியாவின் "ஆக்கிரமிப்பு மனப்பான்மை"யும் பிரசாரம் செய்யப்பட்டன. சீன மக்களின் நட்புணர்ச்சி, விருந்தாளிகளின் மனதில் பதியும்படி திட்டமிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

ஆனல் டில்லிக்குவரும் சாதாரண மந்திரிகள் உரிய முறையிலேயே வரவேற்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ராணுவ அணிவகுப்போ, பொது வரவேற்போ, அளிக்கப்படுவதில்லை. இவை, வெளிநாட்டு அதிபர்களின் ராஜாங்க நல்லெண்ண விஜயம் இல்லையாதலாலும், அலுவல்களை முன்னிட்டு நடைபெறும் தினசரி நிகழ்ச்சிகளாதலாலும் மாமூல்படியே நடத்தப்படுகின்றன. சீன சகல சந்தர்ப்பங்களையும் பிரசார நோக்கத்திற்காகவே பயன்படுத்துகிறதென்பதும், இந்தியா இந்த அம்சத்தில் கோட்டை விடுகிறது என்பதுமே இவைகளிலிருந்து இங்கு கவனிக்கவேண்டிய விஷயம்.

சீன, இந்திய எல்லையில் மட்டுமின்றி, தன்னுடன் நிலத்தொடர்பு கொண்டுள்ள எல்லா நாடுகளின் எல்லைகளுக்கு அருகிலும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ரஸ்தாக்களை அமைத்திருக்கிறது. அமைத்தும்வருகிறது. சீனவின் நீண்டகால நோக்கத்தை ஓரளவு இவற்றிலிருந்தும் கணிக்கலாம்.

எதுவாயினும் இந்தியாவையும், பாகிஸ்தானையும் எடுத்துக்கொண்டால்,பாகிஸ்தானே இப்போது "ஸ்கோர்" அடித்திருக்கிறது எனலாம். காஷ்மீரில் அது தைரியமாக சீனவுக்கு பிரதேசதானம் செய்திருக்கிறது. குறைந்தது காஷ்மீரின் ஒரு பகுதியை நம்பிக்கையுடன் அது எதிர்பார்க்கிறது. சீனவுடன் உறவாடுவதில் மேற்குநாடுகளையும் அது லட்சியம் செய்யவில்லை. ஜனதிபதி அயூப்கானுக்கு உள்நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி மாறி, ஓரளவு அவருக்கு பலத்தை அளிக்கவும் பீகிங் ஒப்பந்தம்வழிசெய்திருக்கிறது. அதே சமயம் காஷ்மீர், சம்பந்தமாகத் தொடர்ந்து இந்தியாவுடன் கெடுபிடி நடத்துவதன் மூலம், பாகிஸ்தான் மக்களின் கவனத்தை உள்நாட்டுப்பிரச்சினையிலிருந்து வேறுபக்கம் திருப்புவதிலும் அவர் வெற்றி பெறக்கூடும்.

---

# பூஜ்யம் தபால்

## டட்லி சேனநாயகா அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர், கொழும்பு.

தலைவரே!

கொழும்பு மாநகரசபையிலே தமிழ்மொழிக்கும் சமஉரிமை அளிக்கும்படியான தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதைக் கேட்டதும் மிகமகிழ்ச்சிஅடைந்தேன். அச்சபையிலே தங்களைத் தலைவராகக் கொண்ட ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் மேயராகவும் மெஜாரிட்டிக் கட்சியினராகவுமுள்ளனர். இதை நினைத்ததும்மொழியைப் பற்றி தங்கள் கட்சியிலே நல்ல மனமாற்றம் ஏற்பட்டுள்ளதற்கான அடையாளமாகக்கொண்டேன். என் கருத்துச்சரிதானு?

தங்கள் தந்தையார் யு. என். பி. கட்சியைஆரம்பித்தபோது, சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக இருக்குமென்ற மேலான கொள்கையைக் கடைப்பிடித்தார். அதைத்தாங்களும் பின்பற்றி வந்தீர்கள். ஆனல் தாங்கள் தற்காலிகமாக கட்சியிலிருந்து ஒதுங்கி, தங்கள் உறவினர் சேர் ஜோன் கொத்தலாவலை தலைவராக இருக்கையில், களனியிலே கூடிய யு. என். பி. கட்சி மகாநாட்டிலே தனிச்சிங்கள தீர்மானம் நிறைவேறியது. அதன் பிறகு அந்தக் கட்சியிலிருந்து திரு. சு. நடேசபிள்ளைபோன்றவர்களும் கூட விலகநேரிட்டது. இதற்காகத் தாங்கள் ரகசியமாகக் கண்ணீர்விட்டதையும் நானறிவேன்.

சொற்பகால தர்பார் நடத்தி சேர் ஜோன் விலகியபின், யு. என். பி. கட்சிக்குத் தாங்கள் மீண்டும் தலைமை வகித்து அதற்குப் புத்துயிரளித்தீர்கள். தலைநகரான கொழும்பு பொதுமக்களின் மகத்தான ஆதரவையும் தங்கள் கட்சி பெற்றபின்,தமிழ் மொழிக்கு அச்சபையிலே சரி உரிமை அளிக்கும்படி ஏகமனதாகச் செய்யப்பட்டதைப் பார்த்ததும், நாட்டில் மொழிப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க, புதிய முயற்சியைத் தாங்கள் வெற்றிகரமாகச் செய்யலாமென்று புதிய நம்பிக்கை ஏற்பட்டது.

தமிழுக்கு உரிமை மறுத்தால் பொதுத்தேர்தலில் வெல்லலாமென்று தப்புக்கணக்குப் போட்டு, பார்லிமெண்ட் சபையை முன்கூட்டியே பல மாதங்களுக்கு முன் கலைத்து, பெருந்தோல்வியைக் கண்டார் சேர் ஜோன். அது யு. என். பி. கட்சிக்கு மட்டுமல்ல, இந்நாட்டிலே எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு பெரிய பாடமாக இருக்க வேண்டும். நாட்டு மக்கள் வகுப்புவெறியையோ, மொழி வெறியையோ விரும்பவில்லை என்பதற்கு இது நல்ல அத்தாட்சி. இதை ஏன் கூறுகிறேனென்ருல், தங்கள் கட்சி செய்துவிட்ட பெரிய தவறைத் தாங்கள், இனி சீக்கிரத்தில் திருத்தி, தங்கள் தந்தையார் இவ்விஷயத்தில் வகுத்ததிட்டத்தைத் தாங்கள் பின்பற்றி நாட்டில் சமூக ஒற்றுமையை மீண்டும் நிலைநாட்ட துணிச்சலுடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான். ஒன்றுமட்டும் உறுதியாகச் சொல்லுகிறேன். அவ்வித காரியத்தைத் தாங்கள் செய்து, ஆளும் கட்சிக்கும் வழிகாட்டுவதாயின், தாங்கள் இச்சமயம் பெரிய தேசியத்தொண்டுசெய்தவர்களாவீர். இதனல் தங்களுக்குப் பொதுமக்களின் ஆதரவு அதிகரிக்குமேயன்றி சற்றும் குறையாது.

தாங்கள் சென்றவாரம் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில், "சுதந்திர நாடாக நாம் முன்னேற வேண்டுமாயின், நமது அற்ப,மத, மொழி, சாதி, வேற்றுமைகளை உதறித் தள்ளி, உறுதியுடனும், தேசாபிமானத்துடனும நடக்கவேண்டும்" என்று கூறியுள்ளதைக் கண்டேன், மொழிவிஷயமாகத் தங்கள் கட்சி செய்துவிட்டபெருந்தவறை திருத்த உடன்முன்வருவீர்களாயின் வகுப்புவாதக்கட்சியாக மாறிவிட்ட தங்கள் கட்சியை மீண்டும் தேசியக்கட்சியாக மாற்றி, ஆளும்கட்சிக்கும் நல்வழிகாட்டுவீர்களென்றே என்னைப்போல் தமிழ்பேசும்மக்களும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

பிரதமரின் அழைப்பின் மீது அலரிமாளிகைக்குச் சென்று தாங்கள் அவருடன் ரகசியமாகப் பேச்சுகள் நடத்தியதும், நாட்டுக்கு நல்லகாலம் பிறக்கப் போகிறதென்று நினைத்தோம்.

அற்பகட்சி வேற்றுமைகள் ஒழிந்து, தேசிய அரசாங்கம் ஏற்படலாமென்றும் மதித்தோம். அண்டையிலே பெரிய ஆபத்து நெருங்கிவந்ததும், அர்த்தமற்ற கட்சிவேற்றுமைகளே இலங்கை அரசியலில் இன்னும் தாண்டவமாடுவதைக் காண மிக ஏமாற்றமாகவுள்ளது. இந்த அவலநிலைமாறி, தேசிய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் சீக்கிரம் வழி பிறக்கவேண்டும். இதற்குத் தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்.

"பூ"

---

## தர்மபுரம் வாக்காளர் இடாப்பு

யாழ்ப்பாணம், சனி

தர்மபுரம் வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படவில்லை என்ற புகாரைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் தேர்தல் பகுதி இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துள்ளது.

தர்மபுரம் வாக்களார்களின் பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்காக தேர்தல்பகுதி இம்மாதம் 13,15.18ம் திகதிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தர்மபுரத்தில் வாக்காளர்கள் மேற்கண்ட திகதிகளில் தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ள முடியுமெனத் தெரிகிறது.

---

## 'அனுமதி வழங்குக'

யாழ்ப்பாணம், சனி

இலங்கையிலுள்ள சைவாலயங்களுக்கு இந்தியாவிலிருந்து உதவிக்கு அந்தணர் வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என்னும் தீர்மானமொன்றினை அகில இலங்கைச் சைவக் குருக்கள்மார் சபை நிறைவேற்றியுள்ளது.

சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் மற்றும் பல விஷயங்கள் பற்றி ஆராயப்பட்டன.

# நித்திலம் கொழிக்கும் கோணமாமலை

— ச. ஜெயசந்திரன் —

**நீண்டகாலப் பழம்பெருமை வாய்ந்த திருக்கோணமலையின் சரித்திரத்தில் இன்று புதியதோர் திருப்பம் நிகழ்ந்து வருகிறது. கி. பி. 1624-ம் வருடம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயம் முந்நூற்றிமுப்பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிற்பாடு புனரமைப்பு பெற்றிருக்கிறது. இதன் கும்பாபிஷேகம் இவ்வாண்டு பங்குனித் திங்கள் 21-ம் நாள் (3-4-63) நிகழவிருக்கின்றது.**

“குணகடல் ஓரம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை” என்று சைவ முதல்வர் திருஞானசம்பந்தசுவாமிகளால் புகழ்ந்துபோற்றப்பட்டது திருக்கோணமலை. ஸ்ரீஸ்காந்த புராணம் என்ற ஸமஸ்கிருத சுந்தப்புராணம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட ஒரு நூலாகும். அந்நூலிலே திருகோணமலைபற்றிய செய்தி இடம்பெறுவது, தென்னிலங்கை பற்றி வடநாட்டார் அறிந்திருக்கும் சிறப்பினைத் தெளிவுறுத்துவதாகும். வாயு பகவானுக்கும் ஆதிசேஷனுக்கும் ஏற்பட்ட போட்டியின் காரணமாக திருக்கைலாசமலையின் சிகரம் மூன்றுதுண்டாகப் பிளந்து மூன்று இடத்தில்வீழ்ந்தது என்றும் அதனில் ஒன்று தட்சிணகைலாசம் (தென் கயிலை) என்று அழைக்கப்படும் திருக்கோணமலை என்றும் பழைய புராணம் ஒன்று கூறும்.

தட்சிணகைலாச புராணம், திருக்கோணசலபுராணம், திருக்கரைசைப் புராணம் என்பன திருக்கோணமலையின் சிறப்புப் பற்றி எழுந்த சமயநூல்களாகும். சமயகுரவர் நால்வருள் முதல்வராம் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற இத்தலம் அருணகிரிநாதராம் முருகன் புகழ்பாடிய பெரியோராலும் பாடல்பெற்ற குமரன் கோட்டமாகவும் விளங்கியது என்று கூறின் அது மிகையாகாது.

திருஞானசம்பந்தரது காலம் 3-ம் நூற்றாண்டு என்றும், 7-ம் நூற்றாண்டு என்றும் கூறுபவர் பலருளர். அருணகிரிநாதருடைய காலத்தை 13-ம் நூற்றாண்டு என்று கொள்ளுவோருமுளர். காலவரையறை பற்றித் திடமாகக் கூறக்கூடிய சான்றுகள் தமிழர் மாட்டில்லாது போனது வருந்தத்தக்கதே.

குளமும் கோட்டமும்நிறுவிய குளக்கோட்டன் இராஜராஜ சோழன் என்பாரும் கவிபிறந்து சிலநாள் கழித்து வந்த வேரோர் சோழன் என்பாருமுளர். முன்னையதைக் கொள்வோமானால் கி. பி. 10-ம் நூற்றாண்டென்றும் பின்னையதை கொண்டால் கி. மு. ஆயிரம், இரண்டாயிரம் வருடமென்றும் கணக்கிடக்கூடும். “முந்நாள் குளக் கோட்டன் மூட்டுந்திருப்பணி” குளக்கோட்டனால் உண்டுபடுத்தப்பட்டதன்று. திருக்கோணமலையின் சிறப்பினைக் கேள்வியுற்ற அம்மன்னன் அதன் சீரழிந்த தன்மையினை புனருத்தாரணம் செய்தனனே தவிர ஆலயமொன்றினைப் புதிதாக அமைத்தவனல்ல.

கந்தளைக் குளம் கட்டியது குளக்கோட்டனே எனக்கொள்வோரும் அக்போதான் கந்தளைக் குளம் கட்டினன் என்று சரித்திர நூலாசிரியரும் தமக்குள் மாறுபடுகின்றனர். எது சரி, எது பிழை என்று நாம் சிந்தித்துத் தெளிவாய் எதையும் கூறிவிடமுடியாது ஆயினும் ஒன்றுமட்டும் திடமாகக்கூறக்கூடியதாகவுண்டு. தமிழரது தொடர்பும் திருக்கோணமலையின் சிறப்பும் காலத்தால் மிகவும் பழையது என்பதுமட்டும் தெளிவு.

இராவணன் போன்ற இதிகாச புருஷர்களது காலமுதற்கொண்டே சைவத்துடன், தமிழருடன் திருமலையும் இணைந்துவிட்டது. கடைச்சங்க காலத்திலே ஈழத்துப் பூதந்தேவனார் சங்கத்தில் அங்கமவகித்திருந்தாரென்றால் இலங்கைத் தமிழரது தொன்மையினை நாம் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. மணல் திடல், மணல் பிட்டி, வலிகாம (மணல் ஊர்) என்று வெறும் மணல்திடலாக யாழ்ப்பாணம் அமைந்திருந்த காலத்தில் திருக்கோணமலை சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த பெருநகராய் தலைநகராய் விளங்கியதென்பது அசைக்கமுடியாத முடிபாகும்.

மூதூர் என்று காலத்தால் மூதத ஊர் திருக்கோணமலையின் பாகமாய் விளங்குவதும் “முத்தூர் அகத்தியன்” என்ற குறிப்பழஞ் செய்யுட்களுள் காணப்படுவதும் “அகஸ்தியர் ஸ்தாபனம்” இங்கு அமைந்திருப்பதும், ஒப்புநோக்கிச்சிந்திப்பதற்குரியதாகும்.

கடைசியாக நடந்த கடல்கோள் சுமார் ஆயிரத்தி இருநூறு ஆண்டுகட்கு முன்பதாகவும், ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு உட்பட்டதாகவும் விளங்கியிருக்கவேண்டும். மணிமேகலையின் காலமும் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்ட காலமும் இக்காலமாகவே இருக்கலாம். இன்று திருக்கோணமலை கடலால் மூன்று பக்கமும் சூழ்ந்திருப்பது போல் அன்று இருந்திருக்கமுடியாது. கடல் தற்சமயம் கௌளியா வெளிச்சவீடு இருக்கும் தொலைவில் சுமார் 12, 15 மைல் தூரத்தில் அமைந்திருந்ததாகக் கர்ணபரம்பரைக் கதையுண்டு. அக்காலத்தில் கடல் வெகுதூரத்திலிருந்தது. அல்லாமல் மகாவலி கங்கையும் இன்றுபோல் வெருகல், குருகல் கங்கை (குருக்கள் கங்கை) என்று வந்து இன்று சங்கமமாவதுபோல் சங்கமமாகாது நீண்டதூரம் வளைந்தோடி தற்சமயம் முடமாண்டான் இருக்கும் வழியாக ஓடித் துறைமுகத்தின் அண்மையால் தபால்நிலையம், மின்சாரநிலையம் முதலியன இருக்கும் இடத்தால் நெடிதே ஓடிச் சிவன்கோவில், மாரியம்மன் கோவில், வீரகத்திப்பிள்ளையார்கோவில் முதலியனவற்றிற்குப் பின்னால் சென்று கந்தளாய்க்கு மேலே வெகுதொலைவில் சங்கமமாயிருக்கவேண்டும். இது ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன் நடந்ததொன்றாக இருக்கவேண்டும். கடைசிக கடல்கோளால் ஆறு தனது பாதையை மாற்றியதோடல்லாமல் கந்தளாய்க் குளம் போன்ற பெரிய குளமாக விளங்கிய துறைமுகத்தையும் கடலாக மாற்றியிருக்க வேண்டும். இத்தனைக்கும் இன்று சான்றுகள் எஞ்சியிருக்கின்றன. இவ்வாறு ஓடிக் காலங்கள் பல கடந்தபோதும் அது ஓடிய வழிகள் முன்பு குறிப்பிட்ட இடங்கள் மிகவும் பள்ளமாக அமைந்திருப்பதோடல்லாமல் மன்னயாவழியில் [illegible]ின் வாயென இன்றும் அமைந்திருக்கும் ஏஜென்ற் மலையும், கந்தசாமி மலையும் சான்று கூறும். ‘வண்ணான் குளம்’ இன்றும் தண்ணீர்த் தேககமாய் விளங்குகிறது. ‘கிங்கஸ்காடின்’ என்ற பெரிய தோட்டமொன்று மிகுந்த பள்ளக்கை காணியாக விளங்குகிறது. வில்லூன்றிப் பள்ளமபோல் தோன்றுகிறது. மானாங்கேணியும் அத்தகையதே. மின்சாரநிலையம் அமைந்திருக்கும் இடத்துக்கு அருகே ஒரு குளம் மிகவும் அண்மையில் மூடப்பட்டுள்ளது. சிவன் கோவில், மாரியம்மன்கோவில், வீரகத்திப் பிள்ளையார்கோவில்களுக்குப் பின் குளங்கள் இப்பவும் அமைந்திருக்கின்றன. மேலும் ‘படுகை’ ‘தொடுவாய்’ என்ற இரண்டு இடங்கள் இன்றும் இருக்கின்றன. ஆறொன்று பிரிந்து செல்லும்போது நடுவில் ஏற்படும் பீடபூமியே படுகை என்றாகும். ஆறும் கடலும் சங்கமமாகும் இடம் தொடுவாய் என்றாகும். அதுவுமல்லாமல் முன்பெல்லாம் கோணேசர் ஆற்றின் வழியாக தெப்பத்தில் வந்து வில்வபத்திரக் கோணேசர் கோவிலிலே இளைப்பாறுவது என்று கூறுவர். வில்வபத்திரக் கோணேசர்கோவில் அதற்குச் சிறந்த சான்றாக மிளிர்கிறது. மேலும் இன்றும் இவ்வாறு ஓடிச்சென்ற இடங்களில் கிணறு தோண்டும் போதெல்லாம் வெவ்வேறு நிறமுடைய மணல் படிமங்கள் காணக்கிடக்கின்றன. கந்தளாயில் இன்றுள்ள கற்பாறைகள் எல்லாம் ஆற்றின் நீரோட்டத்தால் சிக்குண்டு உருண்டு சென்ற கற்கள் போல் தோன்றுகின்றன.

மேலும் திருக்கோணமலை இன்று இருப்பது போன்றில்லாமல் முன்பு மிகவும் உயர்ந்த மலையாக அமைந்திருக்கவும் கூடும். கடல்களில் நிறைந்திருக்கும் கற்பாறைகள் இவற்றிற்குப் போதிய சான்றாகும். புவியியல் வல்லுனர் போல்றெப்சன் திருவண்ணாமலையைக் குறித்து வெளியிட்ட கருத்து திருக்கோணமலைக்கும் பொருந்தும். “திருவண்ணாமலையின் கற்பாறைகள் காலத்தால் முற்பட்டவை. உலகத்தின் வயதும் திருவண்ணாமலையின் வயதும் ஒன்றே. முதன் முதல் கக்கப்பட்ட எரிமலைகளுள் திருவண்ணாமலையும் ஒன்று” என்பதே அவர் கருத்து. இது இப்போது திருக்கோணமலைக்கும் வெகுவாகப் பொருந்தும். நாச்சியார்மலை, வெள்ளாட்டிமலை எனக் குச்சவெளிக்கு அண்மையிலிருக்கும் மலைகளைப் பார்வையிடின் இதன் உண்மையை ஒருவாறு அறியமுடியும்.

காலத்தால் மிகவும் பழமையுற்றுவிளங்கும் திருக்கோணமலையின் சரித்திரம்பழமையானபோதிலும் இன்று நமக்குக் கிடைக்கக்கூடிய அளவில் இல்லை. வன்னியர்களின் ஆட்சிக்கு முன் என்ன நடந்தது என்பது தெளிவாகவில்லை. கன்னியா, தம்பலகாமம், மூதூர், குச்சவெளி போன்றஇயற்கை எழில்மிகு கிராமங்கள் சூழ்ந்த திருக்கோணமலை “திருக்கோணதமலை” என்றே இற்றைக்கு எழுபது எண்பது ஆண்டுகட்கு முன் அழைக்கப்பட்டது என்பதற்கு போதிய சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. திருக்குன்றுத மலையாம் திருக்கோணதமலை அன்றும், இன்றும், என்றும் வந்தாரை வாழவைக்கும் கோணலயப்பதியென அழகு சிறப்புக் குன்றாது அன்றும், இன்றும், என்றும் விளங்காநிற்கிறது.

# தமிழ் மறை தந்த செல்வன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து பெருமிதத்துடன் பாடுகிறோம்.

‘கடுகைத்துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்’—என்று

போற்றினர் இடைக்காடர் என்ற புலவர். ஔவைக் கிழவியோ இன்னும் ஒருபடி மேலே சென்று கடுகை அணுவாக மாற்றிவிட்டாள். மாங்குடி மருதனார் என்ற இன்னொரு புலவர் பாடுகிறார்:

ஓதற் கெளிதாய் உணர்தற் கருதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கி— தீதற்றோர்
உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

வள்ளுவரை ‘செந்நாப் புலவர்’, ‘நாயனார்’ என்றும் வள்ளுவத்தை ‘தமிழ்மறை’, ‘பொய்யாமொழி’ என்றும் வாழ்த்துகிறோம். குறளின் அருமையை உணர்ந்த ஐரோப்பிய அறிஞர்கள் அதை லத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய பல ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். முக்கியமான இந்திய மொழிகள் யாவற்றிலும் நமது சிங்கள மொழியிலும் பெயர்த்து ஆக்கப்பெற்றிருக்கிறது. அதற்கிணையாக உலக இலக்கியத்தில் வேறெதையும் கூற முடியாது. சொலமன் மன்னனை யூத மொழியில் எழுதப்பட்ட ‘அறிவுப் போதனை’ நூல்களும், கெத்தே என்ற ஜெர்மன் புலவனால் எழுதப்பட்ட நீதி நூல்களும், ஆங்கிலத்தில் பேக்கன், ஷேக்ஸ்பியர் ஆகியோர் எழுதிய நூல்களும் திருக்குறளை எட்டியும் தொடமுடியாது.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்ட திருக்குறளில், வள்ளுவர், அறம் என்பதற்கு ஒரு தனிப் பிரிவையே ஒதுக்கியதுமல்லாமல் அதற்கு முதலிடமும் அளித்துள்ளார். அதையும் பின்னர் ஒரு அதிகாரத்துக்குள் அடக்கி ‘அறன் வலியுறுத்தல்’ என்ற தலைப்பில் அதைப் பாயிரத்துக்குள் சேர்த்திருக்கிறார். மீண்டும் அதைச் சுருக்கி, ஒரே ஒரு குறளில், அறம் என்றால் என்ன என்பதை விளக்குகிறார்.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

(பெருமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடம்கொடாமல் அவற்றைக் கடிந்து ஒழுகுவதே அறம்.)

தமிழ்நாட்டில் ‘திருக்குறள் அவதானம்’ என்று ஒரு நிகழ்ச்சி நடப்பதுண்டு. திருக்குறளைத் துறைபோகக் கற்ற ஒருவர் வருவார். கூட்டத்திலுள்ளவர்கள் திருக்குறளைபபற்றி அவரிடம் பலவிதமான கேள்விகளைக் கேட்பார்கள். அவர் ஒவ்வொன்றுக்கும் ‘பட் பட்’ என்று பதில்சொல்லிவிடுவார். உதாரணமாக, ஒருவர் கேட்பார். ‘978-வது திருக்குறளைத் தலைகீழாகக் கூறுங்கள்!’ உடனே அவர்,

வியந்து தன்னை அணியுமாம்
சிறுமை ‘பெருமை என்றும்
பணியுமாம்

என்று கணநேரம் தயங்காமல் கூறுவார். இது இலக்கிய ஜாலவித்தை, போலிருக்கலாம். நாளிலும் பொழுதிலும் குறளைக் ‘கரைத்துக் குடித்தவன்’ உண்டான அறிவுடைமை அது. அப்படிப்பட்டவர் நம் நாட்டில் என்று உதயமாகப்போகிறார்கள்!

# சிகிரியா

(11ம் பக்கத் தொடர்ச்சி)

தாதுசேனனுக்கு முகலன், காசியப்பன் என்ற பெயர்களையுடைய இரு மைந்தர்கள் இருந்தார்கள். தாதுசேனன் மூத்த குமாரனாகிய முகலனுக்கு அரசுரிமை வழங்க எண்ணிய போது, இளையவனான காசியப்பன் சேனாதிபதியின் துணைகொண்டு தாதுசேனனை உயிருடன் புதைத்தான். இதனைக் கண்ணுற்ற முகலன் பயத்தினால் இந்தியாவுக்கு ஓடிப் போய்விட்டான்.

முகலன் இந்தியாவிலிருந்து பெரும்படை திரட்டி வந்து தன்னை எதிர்த்துப் போர்புரிவான் என அஞ்சினான் காசியப்பன். அதனால் அவன், அநுராதபுரத்திற்குச் சிறிது தூரம் தள்ளியுள்ள சிகிரியாக் குன்றைத் தனது இராசதானியாக்கினான்.

செங்குத்தான சிகிரியாக் குன்றில் இப்போது ஏறுவதற்கு பல வசதிகள் செய்திருக்கின்றார்கள். ஆனால், காசியப்பன் சிகிரியாவில் ஏறுவதற்கு மிகவும் கடினமான பாதைகளையே அமைத்திருந்தான்.

சிகிரியா மலையைச் ‘சிங்ககிரி’ என்றும் அழைப்பார்கள். மலையின் உருவம் சிங்கம் போன்று இருப்பதால் அது, ‘சிங்ககிரி’ எனவும் அழைக்கப்படுகிறது. குன்றின் உச்சியில் சிறிய குளமொன்றும், இளைப்பாறுவதற்காகப் போடப்பட்ட பழைய ஆசனமொன்றும் இன்றும் இருக்கின்றன.

சிகிரியாவில் பல அஜந்தாச் சித்திரங்கள் காணப்படுகின்றன. இவற்றைக் காசியப்பன் வரைந்தானென்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். இவ் வஜந்தாச் சித்திரங்களில் ஒன்று நூறுரூபா நோட்டில் வரையப்பட்டிருக்கின்றது. சிகிரியாவின் சுற்றுப்புறத்தில் யானைகள் மரங்களைத் தூக்கிச் செல்லும் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

அநுராதபுரத்திற்குச் செல்லும் போது சரித்திரவரலாற்றில் இடம்பெற்ற சிகிரியாவைப் பார்த்து மகிழலாம்.

## இன்னும் 10 வருடங்களில் ‘ஸ்டீம்’ ரயில் என்ஜின் எடுபட்டுவிடும்

இன்னும் 10 வருடங்களில் மேற்கு ஜெர்மனியில் மின்சார ரயிலும், டீஸல் என்ஜினால் இழுக்கப்படும் ரயில் வண்டிகளும் மட்டுமேதான் ஓடும். நீராவியினால் இயக்கப்படும் ரயில் என்ஜின்கள் எடுபட்டுவிடும். நீராவி இயந்திரங்களின் மாடல்கள் இப்போதே மியூசியங்களில் இடம்பெற ஆரம்பித்துவிட்டன. மூனிச் ஜெர்மன் மியூசியத்திலும் நூரெம்பார்க்கிலுள்ள ரயில்வே மியூசியத்திலும் ஸ்டீவன்ஸன் முதன் முதலாக கண்டுபிடித்த நீராவி இயந்திரத்துடன் சமீபகால ரயில் என்ஜின்வரை பல மொடல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

பல நாடுகளில் இம்மாதிரி டீஸல், மின்சார ரயில் வண்டிகள் ஏற்பட்டுவிடுமாதலால் இந்த நீராவி என்ஜின்கள் பல அழிக்கப்பட்டுவிடும என்றாலும் இவைஒரு சில ஞாபகச் சின்னங்களாக வைத்துக்கொள்ளப்படும்.

அத்தியாயம் 10

# கேட்டிருப்பாய் காற்றே

குறுநாவல்

யோ. பெனடிக்ற்பாலன்

காலை ஆனதும், அம்மா யாழ்ப்பாணப் பெண்களுக்கு இயல்பில் ஒன்றிய ஒன்றைப் பத்தாக்கும்பாவனையோடுஜயாவுக்கு சேதி கூறிஞள். அதைக் கேட்ட ஐயாவுக்கு, தங்களை அப்புகாமியும், குணவதியும் மதிக்கவில்லை என்ற தன்மானத்தின் அடியாக எழுந்த ஆத்திரம் அவரின் யோசனையுடன், அப்புகாமியை அங்கு வேலைக்கு ஒப்படைத்த டாக்டர் ஐயாத்துரை அவர்களிடம் உடனே வரும்படி ஆள் அனுப்பினர் அம்மா.

டாக்டர் ஐயாத்துரை காலை எட்டுமணிக்குத்தன் உல்லாச நடைப் பிரம்புடன் அங்கு வந்தார். அவர் காரால் இறங்கி வரும்போது அப்புகாமி முன் விருந்தையின் மூலைப்பக்கம் கால்களைக் கூட்டிக் குந்தி இருந்து, என்ன நடக்குமோ? ஏது விளையுமோ? என்று தெரியாது ஏங்கிப்போய் இருந்தான். அவனுக்கு ஐயாத்துரை அவர்களைக் கண்டதும் கரிக்குடல் கையைந்தியது. பயததில் அவரைப் பார்க்காது, தலை குனிந்துகொண்டான். பருவ உணர்ச்சியில் எழுந்த மன உறுதி, அவர்களின் அதிகாரததையும், பலத்தையும் எண்ணியதும் தனக்குள்ளாகவே குறுகிக்கொண்டது.

ஐயா படுத்திருக்கும் நடு அறையில் மூவர் மகாநாடு நிகழ்ந்தது. இரண்டு சின்ன உயிர்கள் தமக்குள் சேர்ந்து வாழ ஆசைப்பட்டதனுல் அம் மூவருக்கும் பிரச்சினையை உண்டாக்கிவிட்டது.

அம்மா, நடந்த விஷயத்தை டாக்டரிடம் கூறும்போது, இடைக்கிடை குணவதியை விட்டால் பின்பு அப்படி, தமக்கு ஏற்ற ஒரு வேலைக்காரியை தேடமுடியாதுஎன்பதை அழுத்திக் கூறிஞர். அவர் கூறியதைக் கேட்கக் கேட்க, டாக்டர் அவர்களுக்கு அப்புகாமிமேல் பிடித்துத்தின்னும் கோபம். தன்னையும் மதிக்காமல், வீட்டுக்காரரையும் மதிக்காமல், துணிந்து இக்காரியத்தைச் செய்துவிட்டான் என்ற ஆத்திரத்தின் கொதிப்பு அவருக்கு.

ஐயாவுக்கு ஒரு யோசனை எழுந்தது.

"நீங்கள் உங்கடை வீட்டில் வைச்சிருங்கோவன் அவனை!"

"என்ன சொல்கிறீர்! சீச்சி, சிங்களப்பெண்டியை இப்ப அனுப்புறன். நாய்ப்பயல், நன்றியை மறந்திட்டான்."

டாக்டரின் பேச்சில் ஓடிய ஆத்திரத்தைக்கண்டு, ஐயா மீண்டும் கதைக்கவில்லை.

"அவருக்குப் பொம்பிளை வேணுமாமோ! —ம் —அவரும் கோலமும், அவருக்குப் பொம்பிளையும் ஒண்டு அவசியம் வேணுந்தான். அவன் எங்கே இப்ப?"

"உங்கை விருந்தையில்"

அம்மா சாதாரணமாகவே கூறிஞள்.

"டேய் அப்புகாமி!"

டாக்டரின் அழைப்பு அறையை அதிரவைத்தது. அழைப்பைக்கேட்டதும் அப்புகாமி கெடிக்கலங்கி, புத்த பகவானை நினைத்துக்கொண்டு நடுக்கமெடுக்க நடு அறைக்கு வருகிருன். டாக்டரின் உருவத்தைக் காணுவதென்ருல் அவன் இதயம் வெடித்துவிடும் போன்ற பயம்.

அப்புகாமி வருவதை டாக்டர் கண்டுவிட்டார்.

"இங்கேவாடா நாயே!"

உல்லாச நடைப்பிரம்பை வலதுகையில் எடுத்துவைத்துக்கொண்டார்.

மூவரையும் நோக்கியபோதும், டாக்டரின் முகம்கொண்ட பயங்கரத்தை அவன் கண்ணுற்று, 'தான்செய்தது பெரும் பிழை'தான் என்று நினைத்துக் கொண்டான்.

"டேய்!"

அப்புகாமி நிமிர்ந்தான். அவன் கைகள் ஒன்றை ஒன்று பிசைந்துகொண்டன.

"இங்கை என்னத்துக்கு வந்தனி?"

அவன் அதற்குப் பதில்சொல்லாமல் நிற்பதுதான் சரியென்று எண்ணி, தலைகுனிந்து நின்ருன்.

"டேய்! கேட்டதுக்குப் பதில்!"

"என்னத்துக்கு வந்தனி?"

"வேலைசெய்யுறதுக்கு ஐயா!"

"ஆர் உன்னைக் கொண்டு வந்தது!"

"நீங்க!"

"என்ரை மரியாதையைக் கெடுத்திட்டியா, இல்லையா?"

"......"

"வீட்டுக்காரரிடை மரியாதையைக் கெடுத்திட்டியா, இல்லையா?"

"......"

தான் செய்த காரியத்துக்கு இவ்வளவு விரிவான அர்த்தங்கள், குற்றங்கள் இருக்கும் என்று அவன் எள்ளளவும் நினைக்கவேயில்லை. அப்புகாமியோ, குணவதியோ அப்படி எண்ணியிருந்தால், தம் காதலைத் தமக்குள்ளேயே கொன்றுவிட்டு, தம் வயிற்றுக்குச் சோறுபோட்டால் காணும் என்ற முடிவோடு, காலம்காலமாய்த்தம்உணர்வுகளைநசித்து–, அவர்களுக்கு வேலைக்காரர்களாகவே இருந்திருப்பார்கள். ஏனென்ருல், அவர்கள் உலகமறியாத வேலைக்காரப் பிறவிகள். அவர்களுக்கு என்ன உரிமையை வைத்து எதிர்க்க முடியும்; தம் வாழ்க்கைக்காகப் போராட முடியும்?

அவன் பேசவில்லை.

"உனக்குப் பொம்புளையா வேணும்?"

அப்புகாமி நிமிர்ந்து அவரைப்பார்த்துவிட்டுத் தலை குனிந்துகொண்டான்.

"டேய்!"

நிமிர்ந்தான்.

"உனக் கென்னத்துக்கடா பொம்புளை!"

'... ...'

அவனுக்கு என்ன கேள்வி என்றேவிளங்கவில்லை. டாக்டர் எழுந்து நின்ருர்.

"டேய் உனக்கென்னத்துக்கடா பொம்புளை!"

அவர் கேள்வியின்தொனியில் அதிகாரம் ஏறியது.

அவன் நடுங்கினன்.

அவன் மௌனமாய் நின்றதும் உல்லாசநடைப் பிரம்பால் ஓங்கி அவன் முதுகில் அடித்தார்.

"அம்மே!"

அவன் நெளிந்து முதுகைத் தடவமுன், காலால் அவன் வயிற்றில் உதைந்துவிட்டார்.

"ருஸ்கல்!"

அவன் குப்புற விழுந்து, மெதுவாக எழுந்து நின்ருன். கண்கள் கண்ணீரைச்சிந்தின.

அவன் 'அம்மே' என்று அழைத்ததும், அடுக்களையில் சோகமாய் இருந்து சமையல் செய்துகொண்டிருந்த குணவதி துடித்து எழுந்தாள். தன்னை உண்மையாக நேசித்த அவனுக்கு அடிவிழும் போதும், அவன் அந்த அடியைப் பொறுக்கமுடியாது 'அம்மே' என்று கத்தும்போதும் அவள் மனம் என்ன வதைப்படும். இரு கைகளையும் மார்பில் மாறிப்போட்டு தோள்களை இறுகப் பிடித்துக்கொண்டுகண்ணீர் வடித்தாள்.

"டேய்! அவளுக்கு என்னடா செய்தனி!"

"ஐயா! ஒண்ணும் செய்யேலேங்கையா!"

"உண்மையைச் சொல்லு, கொன்று போடுவன் இப்ப!"

"நான் ஒண்ணுமே செய்யலையுங்கோ!"

"சரி, நீ இங்கை இருக்கப் படாது; இந்த நிமிடம் ஊருக்குப் போயிடவேணும்."

அவன் இதை எதிர்பார்க்கவேயில்லை. தான் போகுமுன் தன் ஆசையை அவர்களிடம் கூறிக் கேட்டுப்பார்க்கவேண்டுமென்ற விபரீத எண்ணமும், துணிவும் பிறந்தது.

டாக்டர் அவனுக்கு அடித்ததில் களைத்து கதிரையில் அமர்ந்தார்.

அம்மா, 'தேமோஸ்பிளாஸ்க்'கில் இருந்தகோப்பியை தம்ளரில் வார்த்துக் கொடுத்தார்.

அவன் தயங்கித்தயங்கி நின்ருன். அவன் நிற்பதைக் கவனியாதவரைப் போல, டாக்டர் கோப்பியைக் குடித்தார்.

"ஐயா!"

இருகைகளையும் தன் வயிற்ருேடு இணைத்துக் குனிந்து நின்ருன். டாக்டர் அடித்த அடி முதுகில் தழும்புகட்டியது.

"என்னடா!"

அம்மா தலையை ஆட்டிக் கேட்டார். அவருடன் டாக்டரும் நிமிர்ந்து, வாய் திறவாது 'என்ன' எனத்தலையைஅசைத்தார்.

"ஐயா! நான் கூலி வேலை செய்து பிளைப்பனுங்க; நல்ல பெலமிருக்கு. என்னை" —

"அதுக்கு என்னடா?"

டாக்டர் கேட்டார்.

"ஐயா நான், ... கோவிச்சுக் கொள்ளாதையுங்கோய்யா!"

"என்னடா?"

"ஐயா நான் குணவதியைக் கலியாணம் முடிக்கப் போறன். அவவுக்கும் விருப்பம். வேணுமாலுக் கேட்டுபபாருங்க, அவவிட்டை."

இதைக்கேட்டதும் டாக்டருக்கு மட்டுமல்ல, ஐயா, அம்மா மூவருக்குமே கோபம் சீறியது. டாக்டர் கதைப்பதால் அம்மாவும் ஐயாவும் வாய்திறவாமல் மனதுக்குள்ளேயே கறுவிக் கொண்டனர்.

"என்னடா! அப்படியோ சங்கதி! நான் கேட்டுப் பாக்கட்டோ! ஆளைப்பார் ஆளை."

அவனுக்கு அவர் செய்யும் நையாண்டியின் அர்த்தம் புரியவில்லை, அவன்சொல்லமுனைந்த முழுவதையும் சொல்லிவிட வேணும் என்ற துடிப்பில்.

"எங்களை விட்டுடுங்கையா! நாங்க எங்கையும் போயிடிறம். நான் அவவுக்கு உழைச்சுக் குடுப்பனுங்க; கஷ்டப்படவிட மாட்டன்."

டாக்டரின் ஆத்திரம் அவரையே வென்று நின்றது.

"நாயே! போடா வெளியே!", தொண்டை கிழியக் கத்திஞர்.

அவன் அதைக் கேட்டதும் திடுக்கிட்டு, அவனையறியாமலே திரும்பிநடந்தான். குணவதி அக்குரலின் அதிகாரத்தொனியைக் கேட்டு, பயங்கரமாய் நடுங்கி, வழியின் முனை தெரியாது, வழிதப்பிய மானைப் போல ஒடுங்கி நின்ருள்.

"இங்கைவாடா!"

அப்புகாமி திரும்பி நடந்து அவர் முன் சென்ருன். அவர் தன் சட்டைப்பைக்குள் இருந்து இருபதுருபாவை எடுத்துக் கொடுத்தார்.

"இந்தா! இந்த நிமிஷம் போயிடு. இங்கை நிற்கப் படாது. நீ பெரிய ஆபத்தான ஆள். உன்ரைபெட்டி எங்கே?"

"அங்கை!"

"எடுத்துக் கொண்டுவா!"

அவன் நடந்து சென்று, அடுக்களையோடு சேர்ந்த மறு அறையில் வைத்த சிறு 'சூட்கேஸ்' பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தான். அவன் அங்கு சென்றபொழுது, குணவதி அடுக்களைக்குள் நின்று, தன்னைப் பார்க்கிருன் என்று அறிந்தும் பயத்திஞல் பார்க்கவேயில்லை.

டாக்டர் தன்முன் சூட்கேஸ் பெட்டியுடன் தலைகுனிந்து நிற்கும் அப்புகாமியைக்கண்டார்.

"ஹைற், போகலாம்!"

அப்புகாமி நீர்கலங்கும் கண்களுடன் நிமிர்ந்துஐயாவையும், அம்மாவையும் பார்த்தான்.

"போட்டுவாறன் அம்மா!"

"போட்டு—வாறன் ஐயா!"

அவஞல் முழுவதையும் சொல்லி முடிக்க முடியவில்லை. அழுகையும், துக்கமும்விம்மின.

அவர்கள் சாதாரணமாகத் தலையை ஆட்டினர். அவர்களுக்குக் குணவதி அவர்களோடு இருக்கிருள், அது போதும். அவன் போனுல் இன்னெருவனைப் பிடித்துக் கொள்ளலாம்.

அவன் திரும்பி நடந்தான். அவன் அழும் உள்ளத்தின் நடுவே, குணவதி இருகைகளாலும் அவனை வாஞ்சையாக அழைக்கிருள். அவஞல் தன் காதலை எண்ணி, குணவதியை நினைத்து அழுவதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியாது. ஏனென்ருல் அவன் ஒருவெறும் மனிதன்! கூலி!

அடுத்த மனிதர் எவருக்குமே பாதகமற்ற முறையிலும், தீங்கு இல்லாத முறையிலும், தனக்கொரு துணையை, அதுவும் அவனை அறிந்து அன்புகாட்டும் ஒருத்தியைப் பெற எண்ணிஞன். அந்த எண்ணத்தால் இன்று துணையுமின்றி, வேலையுமின்றி அடியும் வாங்கி வீடு நோக்கி நடக்கிருன். அவனுக்காக, அவனைப் போன்ற மனித பாவிகளுக்காக நீதி கேட்க உலகில் யாருமில்லையா?

உலகத்தில் மனிதன் பிறக்கிருன். இறக்கிருன். இந்த இரு செயல்களுக்கும் நடுவே, அவன் அடிப்படையான ஆசைகளை, இன்பங்களையே பெறவிடாது, அவர்களைச் செக்குமாடாக்குவது உலகத்தில் எது? தொகை தொகையான உயிர்களின் இரத்தத்தாலும், எலும்பாலும், வியர்வையாலும் உலகத்தைத் தம தாக்கிக் கொண்ட சிறுகூட்டமா? இயற்கையா?

அடுத்த இதழில்

**செ. கதிர்காமநாதன்**

கதையைத் தொடருகிருர்

## ஒரு வழிப்பாதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் வடிவேலு. சற்றுவேளைக்குள்ளாக பாடசாலை மணி ஓசை அவன் தியானத்தைக் கலைத்தது.

றிக்சோவை அதிலேயே விட்டு கேற் அருகே சென்று அந்தப் பிள்ளையின் வருகையை எதிர்நோக்கி நின்ருன்.

பிள்ளையும் வந்தது.

வழக்கமாக றிக்சோ நிற்கு மிடத்தைப் பார்த்துவிட்டு—

"றிக்சோ எங்கே, வடிவேலு?" என்று கேட்டாள்.

"கொஞ்சம் தள்ளி நிக்குதம்மா, வாருங்கோ" என்ருன் வடிவேலு.

வாசலில் சற்றே ஒதுக்கமாக நின்ருள் அவள்.

"றிக்சோவை இங்கே கொண்டுவா"–கண்டிப்புநிறைந்திருந்தது அவள் குரலில்.

"திரும்பி வரப்படாதம்மா. இதில்தானே, வாருங்கோ."

அவள் பதிலே கூருமல் அவனை உற்றுநோக்கிவிட்டு அப்படியே நின்ருள்.

அவன் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிருன். அவள் வாய் திறக்கவில்லை. நின்ற இடத்தைவிட்டு நகரவுமில்லை.

ஏமாற்றம் அடைந்த வடிவேலு றிக்சோவை நோக்கி விரைகிருன்.

றிக்சோவைத்தெற்குநோக்கி இழுத்துச் சென்று சந்தியில் கிழக்கு நோக்கித் திரும்பிப் போய் இரண்டாம் குறுக்குத் தெருவைச் சுற்றிக்கொண்டு கேற் அருகே தன் பள்ளிக்கூட குழந்தைமுன் கொண்டு வந்து நிறுத்துகிருன். குழந்தை அதில் ஏறிக் கொண்டதும் றிக்சோ நகருகிறது.

விஷயத்தைப் புரிந்து கொண்ட பொலிஸ்காரனின் முகத்தில் ஒரு புன்னகை.

எதிரே வந்த மற்ருெரு றிக்சோவை மறித்து சுற்றிக் கொணடு வரும்படி அதற்கு உத்தரவிடுகிருன் பொலிஸ்காரன்.

(யாவும் கற்பனை)

## மரபு மாறுதல்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் வந்துவிட்டதாக எண்ணுவது தவறன்று. ஆயினும் நாவலரைப்போன்ற பெருமகன் இவற்றைக் கையாண்டு இலக்கியம் படைத்தால் மட்டும் தான் அது மரபாக முடியும்.

இனி,

"வெள்ளைநிறத்தொருபூனை
— எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்,
பிள்ளைகள் பெற்றதப்பூனை
— அவை
பேருக்கொரு நிறமாகும்"

என்ற பாரதியார் பாட்டிலே பூனைப்பிள்ளை என்ற தொடரைப் புதியமரபுஎனல் பொருந்துமா? எனவினவலாம். அதனை அவ்வாறு சொல்வது பொருந்துவதாகத் தெரியவில்லை. 'வெள்ளை' யென்பதன் எதுகையாக வந்தமையால் அவ்வாறு பிள்ளை தோன்றிற்று எனக் கொண்டு அதை மறந்துவிடலாம்.

# உலக வாழ்க்கையில் ஆத்மீக ஞானம்

சுவாமி விவேகானந்தரிடம் பாடம் கற்லும்பேறு பெற்றவன் நான். சென்னையிலிருந்து சில பெரியார் அவரைச் சிகாகோவுக்கு அனுப்பியபோது அங்கே உதவி செய்வாரும் நண்பரும் இல்லாதிருந்தும் அஞ்சாத வீரராய்த் திகழ்ந்து குருவின் அருளால் தமது பணியை வெற்றிகரமாக முடித்தார். சீடர் குருவைத் தேடுவது போன்று அவரது குருவும் அவரை நாடக் காத்திருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் அப்போதிருந்த நரேந்திரரைச் சுவாமி விவேகானந்தராக ஒரு கணத்தில் மாற்றிவிட்டார்.

சீடரது மெய்யைத் தீண்டியதும் அவர் ஞானம் பெற்றனர். சுவாமி கேத்திரி மன்னரது அரண்மனையில் இழிகுல நங்கை ஒருத்தியின் பாடலைக் கேட்க விரும்பாது வெளியே சென்றார். எனினும் அவள் பாடிய பாடல் அவருக்கும் உயர்ந்த ஞானநெறியை நினைவூட்டியபோது மீண்டும் மண்டபத்திற்கேகி அவளது பாடலைக் கேட்டார். ஸ்ரீசங்கராசாரியார் காசியில் தீண்டத்தகாதவன் ஒருவனை விட்டு விலகியபோது அவனால் அறிவுறுத்தப்பட்டது போன்றே, சுவாமிஜீயும் தமது ஞானப் பெருமிதத்தைக் கைவிட்டனர். சுவாமிஜி தோன்றிய காலத்திலே எங்கும் நீதியால் எழும் சினமும், அதிகாரத்தை வரம்பு மீறிச் செலுத்தும் சமத்துவமின்மையும், கொடுமையும், அடக்குமுறையும் உலவி வரலாயின. சிலவற்றை ஒழித்தற்கும் ஞானத்தை ஊட்டி இவற்றைப் போக்குதற்கும் மக்களின் விடுதலைக்கும் அவர் பாடுபட்டார் உண்மை மனிதனுக்கும் கல்வியை அளிக்கவேண்டும் என அவர் வற்புறுத்தினர். அவர் உலகுக்கு அளித்த பெரும் செய்தியாவது உலக வாழ்க்கையிலே ஆன்மீக ஞானம் தக்க இடம்பெறவேண்டும் என்பதே.

இந்தியர்க்குள் உறங்கிக் கிடந்த தன்நம்பிக்கையை அவர் விழித்தெழும்படி செய்தார். இவ்வாறு நாடு பழைய சீர்மையைப் பெறும்படி தூண்டினார். வடநாடு தென்னாடு கீழைநாடு மேலைநாடு என்ற வேறுபாட்டை அவர் ஒழித்தார். வேதாந்த ஞானத்தை உலக வாழ்க்கையில் பயன்படுத்தும் அவசியத்தை அவர் வற்புறுத்தினார். தாழ்வுற்ற மக்களை உயர்த்தவும், கல்வி அறிவில்லார்க்குக் கல்வியை ஊட்டவும், கல்வியை எல்லோரிடமும் பரப்பவும் அவர் மக்களைத் தூண்டினார். அவர் சய்த ஒரு பெரும் செயலுக்காக நாம் உண்மையாகவே பெருமை பாராட்டிக் கொள்ளவேண்டும்.

அது யாதெனில், ஸ்ரீராமகிருஷ்ண மிஷனை (சங்கத்தை) அவர் தொடக்கியதே. வேதாந்த சாஸ்திர ஞானத்தைச் செயலாக்குவதற்காகவே அவர் அதை நிறுவினர். நசுக்கப்பட்டவரையும் தாழ்ந்தோரையும் பசியுள்ளோரையும் உயர்த்துதலை ஞானப்பணியாகவும் ஞானசாதனமாகவும் மக்கள் பின்பற்றும் அவசியத்தைச் சுவாமி விவேகானந்தர்போதித்தார். இராமகிருஷ்ண மிஷன் அவர் கூறிய செய்திக்கு இணங்க, அவருடைய பெருநோக்கத்தையும் பயன்தரும் முறையில் நிறைவேற்றி வருகின்றது.

— டாக்டர் ஸி பீ. ராமசாமி அய்யர்

# வானவில்

— சபா. ஜெயராசா —

நாடும் கணவனைத் தேடும் விழியதன்
நாணி வளைந்திடும் நெற்றி யென
ஆடும் முகிலிடை கூடும் சிலையிது
ஆழி நிறைந்திடத் தோன்றி யதோ?

வீசும் வளியிடைத் தூசின் கதியிலே
வாடி மறைந்திடும் வண்ண மென
கூறும் பொழுதினைத் தூறும் சிலையிது
கோள வெளியிடைத் தோன்றி யதோ?

ஆளும் கலைஞரின் வாழும் மொழியிது
ஆழ்ந்து இலங்கிடும் வண்ண மென
சூழும் வெளியிடைச் சாடும் சிலையிது
சார்ந்து விளைந்திடத் தோன்றி யதோ?

ஆகும் தொழிலவன் போகும் தொழிலிடை
ஆன மனப்பொழில் சேர்ந்த தென
தாவும் மழையினைக் கூறும் சிலையிது
தோகை விரித்திடத் தோன்றி யதோ?

# ஐரோப்பாவில் புரட்சிகரமான நகரமைப்புத் திட்டங்கள்

எதிர்காலத்தில் நகரமைப்புத் திட்டம் மிகப் புரட்சிகரமான அமைப்பைக் கொண்டிருக்கலாம். ஒரு பிரதேசம் முழுவதுமே ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருப்பதுடன் 'இன்ப்ராரெட்' என்ற ஊதாக கிரணங்கள் மூலம் வீடுகளுக்கும் தெருக்களுக்கும் வெளிச்ச ஏற்பாடுகளைச் செய்வது குறித்து ஒரு திட்டம் திரு. வெர்னர் ருக்ஞ என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் இப்போது கனவுபோலிருக்கலாம், ஆனால் இது ஒருநாள் நிறைவேறுவது சாத்தியமே என்று கருதப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளின் நகரமைப்பு நிபுணர்கள் மகாநாடு சமீபத்தில் டார்மண்ட் என்ற இடத்தில் நடைபெற்றது. 1954-ம்ஆண்டுக்குப் பின் இவர்கள் நான்காவது தடவையாகக் கூடுகிறார்கள். எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் நகரமைப்பு விஷயத்தில் பிரச்சினைகள் ஒன்ருகவே தான் இருக்கின்றன. ஜனத்தொகை அதிகரிப்பு, போக்குவரத்து நெருக்கடிச் சமாளிப்பு எல்லாருக்கும் வசதியான வீடுகள், கிராமப்புற அழகையும் அமைதியையும் குலைத்துவிடாமல் இருப்பதற்கான வழிகள் ஆகிய இவ் விஷயங்கள் குறித்து இம்மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டன.

நகரங்களிலிருந்து மக்களைக் கிராமப்புறங்களில் குடியேற்ற வேண்டும என்ற கருத்து இப்போது நிபுணர்களிடையே காணப்படவில்லை. கிராமப் புறங்களில் அதிக ஜனநெருசல் ஏற்படுத்திவிட்டு ஆத்மீக, கலாசார கேந்திரங்கள் இல்லாத காலியான நகரங்களை அமைக்கும் யோசனை இப்போது நிராகரிக்கப்பட்டு வருகிறது.

லண்டனிலிருந்து இம்மகாநாட்டிற்கு வந்த திரு. அலெக்ஸாண்டர் ஆர்ம்ஸ்டிராங், இங்கிலாந்திலுள்ள பெரிய நகரங்கள் குறித்தும், நகர்ப்புறங்களில் அமைக்கப்படும் புது நகரங்கள் குறித்தும் ஒரு சொற்பொழிவாற்றினர். இந்த விஸ்தரிப்புப் பகுதியில் வசிப்பவர்கள் தற்காலிக ஏற்பாடாகவே அங்கு வசிக்கிறார்கள் என்றும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் லண்டனில் குடியேற விரும்புகிறார்கள் என்றும் அவர் கூறினர். ஆகவே புது நகரங்கள் சிருஷ்டிக்கும் திட்டம் வெற்றிகரமாக அமையவில்லை என்பதை இவர் விளக்கினர்.

ஹெல்சிங்கிலிருந்து வந்த பேராசிரியர் ஆலிஸ் ப்ளும்ஸ்டெட், ஜப்பானிய நகரமைப்புத்திட்டத்தைக் குறிப்பிட்ட நந்தவனங்கள், சுற்றுப்புறத் தோட்டங்கள், கண்ணைக் கவரும் கட்டிடக்கலை இவையெல்லாம் மிகத் திறமையாகக் கையாளப்படுவது அவசியம் என்பதை வற்புறுத்தியிருக்கிறார்.

ஸ்டாக்ஹோமுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள வேலிங்பி, பார்ஸ்டா என்ற நகரங்கள் சிறந்த மாடல்கள் என்று கருதப்பட்டு வந்தபோதிலும், கட்டிடக்கலை விஷயமாக இப்போது அமைப்பை மாற்ற வேண்டியிருக்கிறது என்று ஸ்டாக்ஹோமிலிருந்து வந்த பேராசிரியர் ஸி. எப். ஆஹ்ல்பர்க் கூறினர். ஸ்வீடனில் 'டார்மிடரி' நகரங்களைப் பெரிய நகரங்களை ஒட்டி அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. நகரங்களையொட்டி நகரங்களின் ஒருபகுதியாகவே விளங்கும்படியாகவும் சுமார் நாலாயிரம் அல்லது ஐயாயிரம் குடும்பங்கள் வசிக்கக் கூடிய உபநகரங்கள் பிரான்ஸில் அமைக்கப்பட்டு வருகின்றன.

சமுதாயத்துடன் ஒன்றுபட்டு வாழவேண்டும். சமூகப் பொறுப்புகளை உணரவேண்டும். இவைகளை அடிப்படையாகக்கொண்டே நகர அமைப்புகள் திட்டம் உருவாக்க வேண்டும் என்ற கருத்து டார்ட்மண்ட் மகாநாட்டில் வற்புறுத்தப்பட்டது. பேராசிரியர் எரிச் குஹென் என்பவர் தலைமையில் ஆக்கன் டெக்னிகல் யூனிவர்ஸிடி மாணவர்கள் இந்த கொள்கைகளை ஆதாரமாகக்கொண்ட நகரமைப்புத் திட்டங்களை உருவாக்கிவருகிறார்கள். இம்மாதிரியாக அமைக்கப்படும் நகரில் 2,00,000முதல் 3,00,000 பேர் வரை வசிக்கலாம். 1957-ம் ஆண்டில் பெர்லின் நகரில் நடைபெற்ற கண்காட்சியில் உருவாக்கப்பட்ட மாடல்களைக் கருத்தில் கொண்டே இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மற்றும் கலாசார அபிவிருத்திக்கும் கலைநிகழ்ச்சிகளுக்கும் ஏற்ற கேந்திரங்களையும் சர்வதேச மதிப்புப் பெறும்படியான இதர அம்சங்களையும் இந்த விஸ்தரிப்புத் திட்டம் பெற்றிருக்கும்.

ஜெல்செங்கிசென் என்ற இடத்திலிருந்து வந்த திரு. வெர்னர் ருக்ஞ ஒரு நூதன திட்டத்தைச் சமர்ப்பித்தார். அத்திட்டம இப்போது ஒரு கனவுபோலிருக்கலாம். ஆனால் ஒருநாள் ஏன் நிறைவேறமுடியாது என்று கருதப்படுகிறது.

தமிழ் வளர்த்த சான்றேர்கள்: 7

# ஈழத்தின் இலக்கண ஞாயிறு மகாவித்துவான் கணேசையர் அவர்கள்

## (1878 — 1958)

எச். எஸ். ஸி. வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க முறையில் 'தமிழ் வளர்த்த சான்றேர்கள்' என்ற வரிசையில் தமிழ்ப் பேரறிஞர்கள் சிலரைப்பற்றிய கட்டுரைகள் இங்கு தொடர்ந்து வெளிவரும்.

— வித்துவான் க. வேந்தனர் —

ஈழத் தமிழகத்தின் இலக்கண ஞாயிறுபோல விளங்கிய மறைத்திருவாளர் மகாவித்துவான் கணேசையர் அவர்கள் இன்று எம் மத்தியில் இல்லை. தொல்காப்பியக்கடலை நிலை கண்டுணர்ந்த தொல்பேராசானை, இனி நாங்கள் கண்டு தொழமுடியாது. ஆராய்ச்சிப் புலமையும், அஞ்சாமையுங் கொண்ட அரசஞ்சண்முகனருடன், ஆகுபெயர் அன்மொழித் தொகைப்போராற்றி, வெற்றி கொண்ட அறிவுப்போராண்மையாளர் ஐயர் அவர்களே யாவர். நாவலர்வழி மாணவராய் நின்று தமிழ்கூறும் நல்லுலகமெல்லாம் தொல்காப்பியப் புலமையைப் பரப்பி, நல்லிசை படைத்த நான்மறை முனிவராய் ஐயர் அவர்கள் விளங்கினர்கள். சைவமுந் தமிழும் பண்பட்டுப் பழுத்த தெய்வத்திருப் பொலிவுடன் வீற்றிருந்து, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு, அருந்தமிழை ஆராய்ந்து கற்பித்துப் பண்டித பட்டதாரிகளாகப் படைத்துதவிப்பயன் சுரந்த, புலனழுக்கற்ற அந்தணளன் புன்னலைக்கட்டுவன் கணேசையர் என்பதை, எந்நாளும் மறக்கமுடியாது.

ஐயர் அவர்கள், யாழ்ப்பாணத்தைச் சார்ந்துவிளங்கும் பன்னூற் புலவர் புகழ் புன்னலைக்கட்டுவனில் வாழ்ந்த சிவம் பெருக்கும் அந்தணர்குலத் தோன்றல். சின்னையரும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் சின்னம்மாளும் செய்தவப்பயனல் தோன்றியவர். இளமைப் பருவத்தில் தமது பள்ளிப் படிப்பிலே வல்லமைபெற்ற ஐயர் அவர்கள், வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்களிடம் இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் ஆராய்ந்து பாடங் கேட்கும் அரிய பேற்றை அடைந்தார். பிள்ளை அவர்களின் மறைவுக்குப்பின் சுன்னகம் அ. குமாரசாமிப்புலவர் அவர்களிடமும் ஐயர் அவர்கள் பாடங்கேட்டார்கள். இங்ஙனம் அழுத்தப்புலமையும் ஆராய்ச்சிவன்மையும் நிரம்பிய வித்துவ சிரோமணி அவர்களிடமும் புலவர் அவர்களிடமும் கற்றுத்தெளிந்த கணேசையர் அவர்களின் புலமைத் திறன் ஒளிவீசத்தொடங்கியது.

ஐயர் அவர்கள் ஆராய்ந்து எழுதிய இலக்கணக் கட்டுரைகள், மதுரை தமிழ்ச்சங்க வெளியீடாகிய செந்தமிழ் என்னும் திங்கள் இதழில் வெளிவந்த காலந்தொட்டே அவரின்புகழ் தமிழ்நாட்டிலும் பரவியது. அக்காலத்தில், ஐயர் அவர்களுடன் ஒத்த தமிழறிவும் சால்பும்கொண்டு விளங்கிய உயர் திருவாளர்கள் ரா. இராகவஐயங்கார், மு. இராகவ ஐயங்கார், மறைமலை அடிகள், அரசஞ்சண்முகனர் என்னும் நல்லிசைப்புலவர்கள், ஐயர் அவர்களின் இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளை மதித்து வரவேற்றார்கள். அக்கட்டுரைகளிற் சில, வடநூற்கடலையும் தென்றமிழ்க்கடலையும், நிலைகண்டுரைத்த மாதவச் சிவஞானமுனிவரின் கொள்கைகளை மறுத்து, உண்மைப் பொருளை நிலைநாட்டி உரைக்கின்றன. "அளபெடை" "போலி எழுத்து" "தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி" "பிறிது பிறிதேற்றல்" "ஆறனுருபு பிறிதுருபேற்றல்" "இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும்" தொகைநிலை. எனும் இலக்கணத்திறனய்வுக் கட்டுரைகள் மிகமிக நுட்பமானவை. ஐயர் அவர்களின் ஆழ்ந்து நுணுகி அகன்ற நுண்மாண் நுழைபுலத்திறத்தையும் ஆராய்ச்சி வன்மையையும் தமிழகம் முழுவதும் அறிந்து மதித்துப் போற்றத்தக்க சிறப்பும் பொருட்செறிவும் இக்கட்டுரைகளில் பொதிந்துள்ளன. தமிழ் இலக்கண மரபைப் பாதுகாத்து, இன்றளவும், இமயம்போல் நிலைதிரியாமல் வாழ்ந்த ஒருவர் ஐயர் அவர்களேயாவர்.

எண்பது ஆண்டுகள் வரையும் இருந்து, தொல்காப்பியம் என்னும் முழுமுதல் இலக்கண நூலைப் பழைய உரைகளுடன், நுணுகி நுணுகி ஆராய்ந்து கற்றுக் கற்பித்த பெருமை தமிழகத்தில் ஐயர் அவர்களுக்கே உரிய தனிச் சிறப்பாகும். தொல்காப்பியமும், சொல்லதிகாரம், சேனவரையர் உரையையும், பொருளதிகாரம் முன் ஐந்தியல்கள் நச்சினர்க்கினியர்உரையையும், பின்னன்கியல்கள் பேராசிரியர் உரையையும், எழுத்ததிகாரம் நச்சினர்க்கினியர் உரையையும் முற்றமுடிய ஆராய்ந்து முழுவதிற்கும் உரை விளக்கம் எழுதி வெளியிட்ட ஐயர் அவர்களின் அருஞ்செயல் பாராட்டற்குரியதாகும். பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராய்ச்சித் துறையில் வீற்றிருந்து, தமிழ்ப் புலமை நடாத்துகின்ற அறிஞர்களாலும் இன்றளவும் செய்யமுடியாத ஓர் அருஞ் செயலை, ஐயர் அவர்கள் செய்துவிட்டார்கள்.

ஐயர் அவர்கள், தாம் எழுதிய தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புக்களில் இளம்பூரணர், தெய்வச்சிலையார், கல்லாடர், இலக்கண விளக்கநூலார், சிவஞானமுனிவர், அரசஞ்சண்முகனர் என்னும் இலக்கண ஆராய்ச்சியாளர்களின் கொள்கைகளை ஒப்பிட்டு நோக்கித் தமது முடிவான கருத்துக்களையும் தந்திருக்கின்றார். இலக்கண முடிவுகளை ஒப்புநோக்கி, ஆராயமுற்படும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு, ஐயர்அவர்களின் உரை விளக்கம், அரியதோர் வழி காட்டியாக விளங்குகின்றது.

இனி இங்ஙனம் இலக்கணப் பெரும் புலமையாளராக விளங்கிய ஐயர் அவர்கள், இரகுவமிசம், புத்துரை, குமாரசாமிப் புலவர் வரலாறு, மருதடிவிநாயகர் பிரபந்தம், குசேலர் சரிதம், ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் எனும் நூல்களையும் இயற்றியுள்ளார். ஐயர் அவர்களின் தமிழ்ப் புலமையும் தமிழ்த் தொண்டும் ஈழநாட்டிற்கோர் புதிய தமிழ்ப் பரம்பரையை உருவாக்கிவிட்டன.

# சிறுவர் பூங்கா

## ஏழைச் சிறுவன்

— டேவிற் இராசையா —

நாவலப்பிட்டி "தாமரைவல்லி", தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளி மாரியாய். அவளுடைய கணவனே அந்தத் தேயிலைத் தோட்டத்தில் நடந்த வேலை நிறுத்தத்தின்போது, பொலிசாரின் குண்டுக்கு இரையாகி, இப்போது பத்துவருடங்களுக்கும் மேலாகிவிட்டது. இப்போது அவள்தான் உழைத்து நாலுபிள்ளைகளுக்கும் சாப்பாடு போடவேண்டும். அவளுக்கு ஒரு சதமேனும் உதவிசெய்ய, கூடப் பிறந்தவர்கள் எவருமேயில்லை. காலை ஏழுமணிக்கெல்லாம் அவள் பரட்டில் இருந்துவிடவேண்டும். அப்படி ஒரு நிமிடமாவது பிந்திவிட்டால், அதோகதிதான். ஆமாம், கங்காணி அவளை வீட்டுக்குத் திருப்பிவிடுவான். அன்றைய நாள் சம்பளமும் இல்லை.

இப்படி உழைத்து உழைத்து மாதக்கடைசியில் ஏதோ ஐம்பதோ அறுபதோ கிடைக்கும். அதைக்கொண்டு தான் பிள்ளைகளின் சாப்பாட்டையும், படிப்பையும் அவள் கவனித்து வந்தாள். அவளுடைய மூத்த மகன் தான் தருமு. பிள்ளை படிக்கவேண்டும், உத்தியோகம் பார்க்கவேண்டும் என்று மற்றத் தாய்மாருக்கு இருக்கும் ஆசையைப் போலத்தான் மாரியாய்க்கும் இருந்தது. தருமுவும் படித்துவந்தான்.

இப்போது தருமுவுக்கு பதின்மூன்று வயதாகிவிட்டது. எட்டாம் வகுப்பில் படிக்கிறான். பதினைந்து வயது நிரம்பும்போது அவன் எஸ். எஸ். ஸி. படிப்பான். அந்த நம்பிக்கை அவன் முகத்தில் பிரகாசித்தது. ஆனால், அந்தப் பாக்கியம் அவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

குடும்பச்சுமையைத் தனியே சுமக்க இயலாதமாரியாய், தருமுவையும் ஒரு வேலையில் வைக்க எத்தனித்தாள். அந்தத் தோட்டத்தில் வேலைபார்க்கும் கண்டக்டரின் அண்ணன் வீட்டில் வேலைக்கு அமர்த்த ஏற்பாடு. கண்டக்டரின் அண்ணன் வீடு கொழும்பில் இருக்கிறது.

அந்தத் தோட்டத்திலேயே தருமுவும் வேலை செய்திருக்கலாம். ஆனால், "கொழும்பில் உள்ள என் அண்ணனுக்கு இரண்டு மூன்று கடைகள் இருக்கின்றன. தருமு அவர் பங்களாவிலேயே கொஞ்சநாட்களுக்கு வேலை செய்துகொண்டிருந்தால், அவரே பார்த்து அவனை தன் கடைகள் ஏதாவதொன்றில் எடுத்துப் போட்டுக்கொள்வார்." என்று அந்த கண்டக்டர், மாரியாயியை நல்லபடி ஏமாற்றிவிட்டார். மாரியாயியும் அவருடைய ஆசைவலைக்குள் அகப்பட்டுக்கொண்டாள். தேயிலைத் தோட்டங்களில் வாழும் கிணற்றுத்தவளைகளில் மாரியாயியும் ஒருத்திதான்.

கொழும்பில் உள்ள கண்டக்டரின் அண்ணனின் பங்களாவில் தருமு எடுபிடி வேலையில் அமர்ந்துகொண்டான்.

அங்கே —

இவ்வளவு நாட்கள் வரையும் நாவலப்பிட்டி "தாமரைவல்லி" தேயிலைத் தோட்டத்தையே சுற்றிச் சுற்றித் திரிந்துகொண்டிருந்த தருமுவுக்கு, இங்கு வீட்டை அடுத்துள்ள கடற்கரையையும், பெரிய பங்களாக்களையும் இந்தப் பெரியவீட்டில் வாழும் வாழ்வையும் பார்க்கும் போதெல்லாம், அவனுக்கு புதிய உலகமாகத் தோன்றியது.

கொஞ்சநாட்கள் வரையில் அம்மாவை நினைந்து நினைந்து மனம் சோர்ந்து இருந்தான் தருமு. இப்போதெல்லாம் வீட்டைப் பற்றிய எண்ணமே அவன் மனத்தில் எழுவதில்லை. அவனுக்கு இப்போது வேளாவேளைக்குக் கிடைக்கும் உருசியான சாப்பாடு, மனத்தை நிறைவுபடுத்தியது. எசமானி அம்மாளுக்கும் தருமுவைப் பிடித்து விட்டது. காரணம், சொன்ன வேலைகளை 'டச், டக்' கென்று செய்துமுடித்துவிடுவான். தருமுவிடம் சுறுசுறுப்பும் அறிவும் இழையோடியது. தருமு கொஞ்சம் படித்திருப்பதை அறிந்த அந்த எசமானி அம்மாள், ஓய்வு நேரங்களில் அவனுக்குப்பாடம் சொல்லிக் கொடுத்தாள். அப்போது, தருமுவைப் பார்க்கவேண்டுமே! ஒரே மகிழ்ச்சிதான்.

ஏனோ எஜமானி அம்மாளின் மகன் ரவிக்குமட்டும்தான் தருமுவைப் பிடித்துக்கொள்ளவேயில்லை. தருமுவைக்காணும் போதெல்லாம் ரவிக்குச் சினம் சினமாக வரும். தருமுவும் ரவியோடு முகம்கொடுத்துப் பேசமாட்டான். ரவியிடம் பேசும் போதும்கூட தருமுவுக்கு உடல் நடுங்கும். காரணம், ரவி அவனைச் சட்டென்று அடித்துவிடுவான். இவ்வளவுச்கும் காரணம், தருமுதன் வேலைகளை 'டக், டக்'கென்று செய்துமுடித்துக்கொள்வதும், எதையாவது படித்துக்கொண்டோ, எழுதிக்கொண்டோ இருப்பதும்தான். இது ரவிக்கு அறவே பிடித்துக்கொள்ளவில்லை. அவன் இப்படிப் படிப்பதையோ, எழுதுவதையோ தாயார் கண்டால், படிக்காமல் திரியும் தன்னை ஏசு ஏசென்று ஏசிவிடுவாள், என்ற எண்ணம் ரவிக்கு. ரவிக்கு படிப்பு என்றால் வேம்புதான். 'கரம்' விளையாடுவதென்றால் ரவிக்குச்சோறும் வேண்டாம்.

ஒருநாள் —

சனிக்கிழமை மாலை நேரம்.

ரவிதன் பள்ளி நண்பர்களுடன்கூடி 'கரம்' ஆடிக்கொண்டிருக்கிறான். தருமுவுக்கும் ஓய்வுநேரம்தான். அவனும் அவர்கள் விளையாடுவதை இரசித்துக்கொண்டிருக்கிறான். இதோ, ரவியின் ஆட்டம்!-அப்போது கீழேவிழுந்து கிடந்த 'கரம் ராயை' டக்கென்று எடுத்து ஆட்டப் பலகையில் தருமு வைக்கின்றான். ரவியின் குறிதவறிவிடுகிறது. ரவிக்கு பொத்தென்று சினம் பொங்கிவிடுகிறது. 'தோட்டக்காட்டான்!' என்றான் ரவி.

ஏதோ முனகிக்கொண்டே தருமு உள்ளே செல்கிறான். சினத்துடன் இருந்த ரவிக்கு, தருமு முனகியது அவன் மனத்தைக் குத்திற்று. துள்ளி எழுகிறான் ரவி.

'அடே!—உனக்கு எல்லாம் அம்மா கொடுக்கும் செல்லம்தானடா. வேலைக்கார நாய்ப்பயலுக்கு என்ன புத்தகம், படிப்பு!'—என்று கர்ஜித்துக்கொண்டே தருமுவின் முகத்தில்'பளார் பளார்' என அறைகிறான். அம்மாவிடம் சொல்ல ஓடுகிறான். அப்போது அம்மாவே அங்கு வருகிறாள். நடந்ததை ரவி கொஞ்சிக் கொஞ்சிச் சொல்லுகின்றான். தருமுவோ பேய் அறைந்தவனைப்போல் பயந்து சுவரோரமாய் நிற்கின்றான். அவன் எந்த அம்மாவிடத்தில் சொல்வான். எஜமானி அம்மாளோ தருமுவை எரித்துவிடுவதைப் போல முறைக்கிறாள்— தன் பிள்ளைதானே அவளுக்கு உயர்வு! தருமு தன் அம்மாவை நினைந்து கண்ணீர் வடித்துக் கொண்டு தலைகுனிந்தபடி நிற்கின்றான்.

இனி என்ன நடக்குமோ?...

## -நீலக் கடல்-

— செ. குணரத்தினம் —

நீலக்கடலடி கோமளம் — அதன்
நீளத்தைப் பாரடி கோமளம்
ஈழத்தைச் சுற்றியே கோமளம் — இது
இருக்குது பாரடி கோமளம்

சூரியன் வருகிறான் பாரடி — கடல்
சூட்டால் நெளிவதைப் பாரடி
மேனி சிலிர்ப்பதைப் பாரடி — கடல்
மென் காற்றுலாவுது பாரடி

கப்பல் கிடப்பதைப் பாரடி — கடல்த்
தோணிகள் செல்வதைப் பாரடி
புள்ளுப் பறப்பதைப் பாரடி — அலை
புரண்டு மடிவதைப் பாரடி

ஆழத்தைப் பாரடி கோமளம் — கடல்
அடியிலே முத்துக்கள், மீனினம்
ஞாலத் துலவிடும் செல்வங்கள் — இந்த
நீலக்கடலிலும் உண்டடி.

## திருவள்ளுவர்

— கலா வசுமதி —

உலகம் போற்றும் திருவள்ளுவர் இற்றைக்கு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த பெரும் புலவராவர். பொதுமறை என்று வழங்கப்படும் திருக்குறளை இப்பெரியார் எழுதியுள்ளார்.



உலக வழக்கிலிருக்கும் பல மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான மக்கள் திருக்குறளை அருளிச் செய்த தெய்வப்புலவர் திருவள்ளுவரைப் போற்றுகின்றார்கள். திருவள்ளுவர் திருநாள் இந்தியாவிலும், ஈழத்திலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

வாழ்க்கைக்கு வேண்டிய சகல விஷயங்களையும் இரண்டடிக் குறள் மூலம் நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களுக்குள் அடக்கியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை.

வள்ளுவருக்குப் பின்தோன்றிய பல புலவர்கள் திருக்குறளையும் திருவள்ளுவரையும் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

தமிழ் மூதாட்டி என்றழைக்கப்படும் ஔவையார்,

"அணுவைத் துளைத்து
ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத்தறித்த குறள்"

என்று திருக்குறள் என்னும் நூலின் சிறப்பைப்போற்றுகின்றார்.

தூங்கிக்கிடந்தபாரதமக்களை உணர்ச்சி மிகுந்த செந்தமிழ்க் கவிதைகளால் தட்டியெழுப்பி சுதந்திரவேட்கையை உண்டாக்கிய பாரதியார்,

"யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல்
வள்ளுவனைப்போல்
இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை,
உண்மை வெறும்
புகழ்ச்சியில்லை"

என்று பாடுகின்றார்.

திருக்குறளுக்குப் பல அறிஞர்கள் உரையெழுதினார்கள்.

பொதுமறைநூலாகிய திருக்குறளை அவனிக்களித்த வள்ளுவர் பெருமானை மறவாது, வருடந்தோறும் வள்ளுவர் தினவிழாவைச் சிறப்பாகக்கொண்டாடுவோம்.

## சிகிரியா

— எஸ். டி. ராஜன் —

ஈழநாட்டில் வாழ்ந்த அரசர்களில் பலர் அநுராதபுரத்தையும், அதனை அடுத்துள்ள இடங்களையும் தங்கள் இராசதானியாக்கி, அங்கே ஆலயங்கள், பூந்தோட்டங்கள், நீராடும் இடங்கள், மண்டபங்கள் முதலியவற்றையும் பெரிய குளங்களையும் கட்டுவித்தார்கள். அவற்றுள் சிலவற்றை நாம் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அநுராதபுரத்திலிருந்து சுமார் ஐம்பது மைல்களுக்கப்பால் சிகிரியா என்றோர் மலையுண்டு. அம்மலைமேலும், அதன் சுற்றுப்புறங்களிலும் அரண்மனைகளை அமைத்து, காசியப்பன் என்னும் அரசன் வாழ்ந்து வந்தான். இம்மலையின் உச்சியை அடைவதற்கு எண்ணற்ற படிகளின்மீது ஏறிச்செல்லவேண்டும். சில இடங்களில் இரும்புக்கம்பியைப் பிடித்துக்கொண்டு, பயங்கரமான உயரத்தில் ஏறிச்செல்லவேண்டும். சிகிரியாவின் விரிவான வரலாற்றைச் சரித்திரப்புத்தகங்களிலே காணலாம்.

தாதுசேனன் என்னும் பெயரையுடைய இளம் வாலிபன் ஒருவன் தலைமையில் ஒரு பெரும்படை, இந்தியநாட்டிலிருந்து இலங்காபுரிக்கு வந்து வெற்றிவாகை சூடியது.

நானூற்றி அறுபதாம் ஆண்டு தொடக்கம் நானூற்றி எழுபத்தெட்டாம் ஆண்டுவரை தாதுசேனன் அநுராதபுரியை ஆண்டுவந்தான். தாதுசேனன் அநுராதபுரத்தின் அரசனாக இருந்து அரசாட்சிசெய்த காலத்தில் அநேக நன்மைகளைச் செய்தான்.

(8-ம் பக்கம் பார்க்க)

## கண்ணன் - ஒரு டாக்டர்

— மு. ஜெயகுமாரன் —

"ஐயா"

"என்ன?"

"யாரோ உங்களைப் பார்க்க வேண்டுமாம்."

'இப்பொழுது யாரையும் பார்க்கமுடியாது.'

வந்தவன் போய்விட்டான். சிகரெட் புகையைக் கடைசி முறையாக ஒருக்கால் உள்ளிழுத்துவிட்டு, அடிக்கட்டையைக் கிண்ணத்தினுள் போட்டுவிட்டு, நிமிர்ந்தார் டாக்டர் கண்ணன். எதிரே கிடந்த 'தாய்' என்ற புத்தகம் அவர் பார்வையில் பட்டது.

அந்தப் புத்தகத்தைக் கண்ட கண்ணன் விம்மி விம்மி அழலானான். பாவம், அவன் சிறு வயதில் தாயைத் தவிக்கவிட்டு ஓடிவந்தவன். ஆம்; கண்ணன் வறிய குடும்பத்தில் பிறந்தவன். சிறுவயதிலேயே தந்தையை இழந்துவிட்டான். அவன் தாயோ எப்படியோ கஷ்டப்பட்டுக் கண்ணனுடைய வயிற்றையும் தன் வயிற்றையும் கழுவி வந்தாள். ஒருவாறு கண்ணனையும் பாடசாலையில் சேர்த்துப் படிப்பித்து வந்தாள். கண்ணனும் வெகு கெட்டித்தனமாகப் படித்து எட்டாம் வகுப்பை எட்டிப்பிடித்தான். அன்றொரு நாள்:

பாடசாலை விழாவில் கலந்துகொள்வதற்காகக் கண்ணன் தாயிடம் பத்துரூபா கேட்க அவள் "நாங்களெல்லாம் ஏழைகள். எங்களால் அந்த விழாவில் கலந்துகொள்ள முடியாதடா" என்று கூறினாள். இதனால் கண்ணன் தாயுடன் கோபித்துக் கொண்டு ஊரையே விட்டுப் புறப்பட்டுவிட்டான்.

அவன் யாருமற்ற அனாதையாகத் திரிந்தபொழுது ஒரு நாள் அவன் செய்த அதிர்ஷ்டமோ என்னவோ குழந்தைப் பேறு கிட்டாத தம்பதிகள் அவனை எடுத்து வளர்த்தனர். காலத்தின் சுழற்சியில் கண்ணன் டாக்டராகிவிட்டான். அவனுக்கு டாக்டர் பரீட்சையில் சித்தியெய்திய பிற்பாடே தாயின் நினைவு வந்தது. தாயைத் தேடிப்போனபோது அவனுக்குக் கிடைத்தது ஏமாற்றம் தான். ஆம். அவன் தாய் தன் மகனை இழந்தபின் தான் வைத்திருந்த வீட்டை விற்று விட்டு எங்கேயோ எல்லாம் அவனைத் தேடி அலைந்தாள். பின்பு அவளைப் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லையாம். இது அண்டை அயலார் கொடுத்த தகவல்.

"ஐயா!" — மீண்டும் வேலைக்காரனின் குரல், அவன் சிந்தனை கலைந்தது. கைக்குட்டையினால் கண்களினின்றும் வழிந்த நீரைத் துடைத்தவாறே 'என்ன?' என்றான் கண்ணன்.

"அப்பொழுது வந்த கிழவி இன்னும் போகவில்லை. உங்களை அவசரமாய்ப் பார்க்க வேணுமாம்."

'முடியாது. என்னால் முடியாது' என்று கத்தினான் கண்ணன்.

"ஐயா வருத்தத்தின் வேதனை தாங்காமல் துடிக்கிறாள்."

"அப்படியானால் நீ வைத்தியம் செய்யேன்" என்று வேலைக்காரன் மேல் சீறிவிழுந்தான் கண்ணன்.

அவன் போய்விட்டான்.

அன்று மாலை.

கண்ணன் ஒவ்வொரு வார்ட்டாக நோயாளிகளைப் பரிசோதித்துக்கொண்டு வந்த பொழுது ஒரு வார்ட்டில் "ஸார் இன்றைக்கு ஒரு கேஸ் போச்சு. மத்தியானம் உங்கள் வீட்டுக்குக்கூட வந்தாளாம். பாவம் ஸார். ஒரு மணிக்கு அட்மிட் பண்ணி அரை மணித்தியாலத்தில் செத்துவிட்டாள்" என்று ஒரு கட்டிலைக் காட்டினாள் நர்ஸ். அந்தக் கட்டிலைப் பார்த்த கண்ணனுக்கு உலகமே தலையில் இடிந்து விழுந்து விட்டது போல் இருந்தது. ஆம் அந்தக் கட்டிலில் கிடந்தது அவன் அன்னைதான். சிரித்தவாறே மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்த அவள் உடலைக் கட்டியணைத்து கதறினான் கண்ணன்.

## சங்கானைப் பட்டினம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

சங்கானைச் சந்தைக் குத்தகை- 1-4-63 தொடக்கம் 31-12-63 வரை கீழ்க்காணும் சங்கானைச் சந்தைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் சங்கானைப் பட்டின விசேட ஆணையாளரால் 25-3-63-ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் சங்கானைப் பட்டின அலுவலகத்திலிருந்து பெற்ற மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரை இடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

1. மரக்கறிச் சந்தை.
2. மீன் சந்தை.

கேள்விப் பத்திரங்கள் 25-3-63-ந் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிவரை வழங்கப்படும். மேற்படி ஒவ்வொரு சந்தைக்கும் (மரக்கறிச் சந்தை, மீன் சந்தை) தனித்தனிப் பத்ரங்கள் பெறுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரத்தின் விலை......... ரூபா 10/=

கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய பொறுப்புப் பணம்......... ரூபா 250/=

கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் நொத்தாரிஸ் உறுதிக்காகச் செலுத்தப்படவேண்டிய கட்டணம்......... ரூபா 250/=

இதர விபரங்களைக் கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து அறிந்துகொள்ளலாம்.

விசேட ஆணையாளர்
சங்கானைப் பட்டினம்.

## மனிதனின் உடையை மாடு தின்றதாம்!

மன்னார், சனி

கடந்த சனிக்கிழமை குடிவெறியில் இருந்த ஒருவர் முருங்கன் பகுதியிலுள்ள முத்து கடைக்கருகாமையில் இரவில் நித்திரை செய்துகொண்டிருக்கும் சமயம் மாடொன்று அவரின் உடைகளைத் தின்றுவிட்டதாம். முருங்கன் பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது.


## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர்.
கலாயபிள்ளையார்கோவிலடி.
யாழ்ப்பாணம்.

## வேலை தேவை

நற்குணசாலியான வீட்டு வேலை, டிரைவிங் (லைசன்சுடன்) தெரிந்த ஒருவருக்கு வேலை தேவை. 100 மானிப்பாய் ரோட்டுக்கு விண்ணப்பிக்கவும். 758


விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சங்கானைப் பட்டினம்,
சங்கானை, 7-3-63.

757

# ‘சிங்களத்துக்குஇடமளிப்பதால் தமிழ் அழிந்து விடாது’

## மாநகரசபை மொழிப்பிரச்னை விவாதத்தில் ஹாஜி அபுசாலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

‘தமிழ் மக்கள் சிங்கள மொழிக்கு இடமளிப்பதனால் தமிழ் அழிந்துவிடாது. தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஏனைய மொழிகளைக் கேவலமாக எண்ணக்கூடாது’ எம் மத்தியில் உள்ள தீவிரவாதிகளைப்போல சிங்கள மக்கள் மத்தியிலும் தீவிரவாதிகள் உள்ளனர் என்பதனை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. என்று ஹாஜி. வி. எம். எம். அபுசாலி யாழ்ப்பாணம் மாநகரசபையில் பேசும்போது கூறினார்.

மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதிக் குழுவின் சிபார்சுகள் பரிசீலனை செய்யப்பட்டன. கடிதத் தொடர்புகளை எம் மொழியில் வைத்துக்கொள்வதென ஆராயப்பட்டபோது மொழிப் பிரச்சனை சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது.

திரு. ஏ. ஜி. ராஜசூரியர் ‘எந்தமொழியில் கடிதம் அனுப்பப்படுகிறதோ அதே மொழியில் இச்சபையும்கடிதம் அனுப்ப வேண்டும்’ என்று வற்புறுத்தினார். அவர் பேசுகையில் ‘நாம் சிங்களமொழிக்கு இடமளித்து நமது பெருந்தன்மையை அவர்களுக்குக் காட்டவேண்டும். இதனைப் பார்த்தாவது சிங்கள மக்களும் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள முயல்வார்கள். மொழிக்குநாம் மதிப்புக் கொடுப்பதனால் தவறு ஏற்படப்போவதில்லை.

ஹாஜி. வி. எம். எம். அபுசாலி பேசுகையில் பல மொழிகள் கற்றிருப்பதனால் மனிதன் உயர்ச்சியடைய முடியும் என்றும் தனக்கென ஒருநீதி பிறர்க்கொரு நீதி என்றிருப்பவர்களினலேதான் கஷ்டங்கள் உண்டாகின்றன என்றும் கூறினார். அவர் மேலும் பேசுகையில் தமிழ் மக்கள் சுபீட்சமடைய வேண்டுமாயின் சிங்களத்தைப் புறக்கணிக்கக்கூடாது என்றார்.

இவ் விவாதத்தில் உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம், திருவாளர்கள் பீ. ச. சோமசுந்தரம், என். தேவபாலசுந்தரம் ஆகியோரும் பேசினர். விவாதம் அடுத்த வெள்ளிக்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டது,

—

## முன்னாள் ஸிரியா அதிபர், பிரதமர்

### துருக்கி தூதரகத்தில் தஞ்சம்?

டமாஸ்கஸ், மார்ச். 9

ஸிரியாவில் அமைதியாக, இரத்தம் சிந்தாமல், வெற்றிகரமாக நடந்தேறிய ராணுவப் புரட்சியைத் தொடர்ந்து, ஸிரியாவின் முன்னாள் அதிபர், பிரதமர், மந்திரிகள் ஆகியோர் டமாஸ்கஸிலுள்ள துருக்கித் தூதரகத்தில் தஞ்சம்புகுந்திருப்பதாகச் செய்தியொன்று கூறுகிறது. முன்னாள் ஸிரியா பிரதமரும் மந்திரிகளும் தோட்டச் சுவரொன்றைத் தாண்டிக் குதித்து துருக்கித் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனராம்.

ஸிரியாவில் இராணுவப் புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் ஸிரியா இராணுவப் புரட்சிச்சபை வெளியிட்ட ஓர் அறிக்கையில், இராணுவ ஆட்சியை நடத்த வேண்டுமென்பது தங்களது நோக்கமல்லவென்றும், ஸிரியா மக்களை நல்வழியில் நடத்திச் செல்வதே தங்களது உண்மையான நோக்கமென்றும், ஐ. நா. ஸாசனத்தை மதிக்குமென்றும் தெரிவித்துள்ளது.

நெல்லியடியில்

## 143 சாராயபோத்தல் கைப்பற்றப்பட்டது

### இருவர் கைது

யாழ்ப்பாணம், சனி

சுமார் 1200 ரூபா பெறுமதியான சாராயம் காரில்கொண்டு செல்லப்பட்ட போது பொலிசாரால் கைப்பற்றப்பட்டது. இச்சம்பவம் நெல்லியடியில் நடைபெற்றுள்ளது.

நேற்றுக்காலை நெல்லியடிச் சந்தியில் ஒருகாரில் 1200ரூபா பெறுமதியான 143 சாராயப் போத்தல்கள்கொண்டுசெல்லப் படுவதனை பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டி. ஆறுமுகம் கண்டுபிடித்தார். நெல்லியடி உப்பு ரோட்டில் சாராயம் கொண்டுசெல்லப் படுவதுகண்டுபிடிக்கப்பட்டது சாராயம் கொண்டுசென்ற கார் கைப்பற்றப்பட்டதுடன் சட்ட விரோதமாகச் சாராயம் கடத்திச் செல்ல முயன்றதாக சிதம்பரப்பிள்ளை நல்லையாவும், சண்முகம் சபாரத்தினமும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட சாராயமும் காரும் பொலிஸ் நிலையத்தில் உள்ளன. இவர்கள் இம்மாதம் 12-ம் தேதி பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர்செய்யப்படவிருக்கின்றனர். மேற்கொண்டும் பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

—

## பிரபல திருடன் பிடிபட்டான்

மின்னேரி, வெள்ளி

கேகாலை, குருநாக்கலை பதுளை, பொலன்நறுவை பொலிசாரினால் தேடப்பட்டு வந்த பெயர்பெற்ற திருடனை இண்டுறுமே ஜயவீரா, ஹிங்குருக்கொட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. ஏ. எம். பி. அபயசிங்காவினால் கைதுசெய்யப்பட்டான்.

விபரம்அறிந்த ஜயவீரா, பொலிசார் தம்மைக்கண்டு பிடித்துவிடுவார்கள் என்று பயந்து, உல்பத்வெல என்ற இடத்தில் மறைந்து கொண்டான். ஆனால் பொலிசார் பின்தொடரவே, அவன் ஆற்றுக்குள் பாய்ந்து நீந்தத் தொடங்கினான். ஹிங்குருக்கொட பொலிஸைச் சேர்ந்த அபயசிங்கா அவனைப் பின்தொடர்ந்து சென்றார். இறுதியில் அவன் ஆற்றைக்கடந்து காட்டுக்குள் ஓடி மறைந்தான். இருந்தபோதிலும், அபயசிங்கா அவனைப் பின்தொடர்ந்துசென்று சிலரின் உதவியுடன் கைதுசெய்தார்

பிடிபட்ட ஜயவீராவிடம், ஒரு ரலி பைசிக்கள், பிலிப்ஸ் வானெலி, ஒரு எக்கோ வானெலி ஆகியன இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## வெலிக்கடைசிறையில் கள்ளநோட்டுகள் அச்சிட முயற்சி!

கொழும்பு சனி

கள்ளத்தனமான கரன்ஸி நோட்டுக்களை அச்சிடுவதற்குரிய கருவிகளும் தளபாடங்களும், வெலிக்கடை சிறைச்சாலைக்குள்ளிருக்கக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கள்ளத்தனமானகரன்ஸி நோட்டுகளை அச்சிடுவதற்குஉபயோகிக்கப்படும் ‘புளக்குகள்’ வெலிக்கடை சிறையின் அச்சகப்பகுதியிலிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக சிறைச்சாலை சுப்ரின்டன் ஒருவர் விசாரணை நடத்தினார்.

கள்ளத்தனமாக கரன்ஸி நோட்டுக்களை அச்சிட முயன்றதாக சந்தேகத்தின் மீது சிறையிலுள்ள மூன்று கைதிகள் இப்பொழுதுதனிப்பட்டசிறைக் கூண்டுகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிறைச்சாலையில் இப்படியான ஒரு முயற்சி இது வரை இலங்கையில் எந்த சிறையிலும் நடைபெறவில்லை. புலன்விசாரணையில் சி. ஐ. டி. பொலிசாரின் உதவிகளை சிறைச்சாலை அதிகாரிகள் நாடியுள்ளனர்.

—

## பால்சபை ராஜினமா

கொழும்பு, சனி

பாற்சபை நேற்று தனது ராஜினமாவைச் சமர்ப்பித்தது. நேற்று நடைபெற்ற ஒரு அவசரக் கூட்டத்துக்குப் பின்னர் பாற்சபையிலுள்ள மொத்த ஏழு டைரக்டர்களும் தங்களது ராஜினமாவைச் சமர்ப்பித்தனர். நேற்று நடைபெற்ற கூட்டத்துக்கு காணி விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா சமுகமளித்திருந்தார்,

மந்திரி திரு. சி.பி.டி' சில்வாவுடன்பேசியதைத்தொடர்ந்தே பால்சபையைச் சேர்ந்த ஏழு டைரக்டர்களும் தங்களது ராஜினமா செய்தனர்.

பால்சபையைத் திருத்தியமைக்கும்பொருட்டே அதன் டைரக்டர்கள் ராஜினமா செய்ததாகத் தெரியவருகிறது

—

## சைப்ரஸ் துணை அதிபர்

புதுடில்லி, மார்ச் 8

சைப்ரஸ் துணைஅதிபர் இன்று பிரதமர் நேருவுடன் பகலுணவு அருந்தினர்.

## அராலி கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அராலி வாலையம்மன்கோவில் கொலைவழக்கில் இரு எதிரிகளும் நேற்று விசாரணையின் பின் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டனால் விடுதலைசெய்யப்பட்டனர்.

அராலி வாலையம்மன் கோவில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் திகதி அராலியைச் சேர்ந்த நல்லையா பேரம்பலம் என்பவரைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த அப்பாக்குட்டி அன்னலிங்கம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் விசாரணையின்பின் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் அனுசரணையுடனும் திரு. விஸ்வநாதனின் உதவியுடனும் ஆஜரானர்.

இவ்வழக்கின் தீர்ப்பை அறிவதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்ட பின் கோர்ட்டிலிருந்து வெளியேவந்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு விடுதலை செய்யப்பட்ட எதிரிகள் மலர் மாலைசூட்டி வரவேற்பளித்தனர்.


# இப்பொழுது நடைபெறுகிறது

வீர காவியம் !!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) — ராஜ் (நீர்கொழும்பு) — விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) — திவொளி (நுவரேலியா) — ஜெமினி (ருகலை) — ஸ்ரீகிருஷ்ண (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.

★ பார்த்தோர் பரவசப்படுகிறார்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிறார்கள்

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

## கப்பலோட்டிய தமிழன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், சரோஜா தேவி
நடித்த
பாலும் பழமும்


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 83-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.